Des: Deltota Harees

AHARAM அகரம்

தரம் 5 - 11 வரை
எண்: 07 எழுத்து: 06 ஜூன் 2013
www.aharam.lk

உலக சூழல் தினம்



09 JUN 2013

சவால்கள்தான் திறமையை வளர்க்கும்

கற்றல் நுணுக்கமும் ஞாபக சக்தியும்



மாதாந்த சிறுவர் சஞ்சிகை 40/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்ரா கல்வி நிலைய நூல் அறிமுகம்

அஷ்ஷெய்க். எம்.எம்.எம். அஸாம் எழுதிய நூல்கள்



மும்மொழி அரபுச் சொற்களஞ்சியம்

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அரபுச் சொற்களைக் கற்பதற்கு ஏதுவாக இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. அன்றாடம் கதைப்பதற்குத் தேவைப்படும் சொற்கள் இந்நூலிலே தொகுக்கப்பட்டுள்ளன. அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய பல்துறை சார்ந்த சொற்கள் 40 தலைப்புகளின் அடிப்படையில் பிரித்து இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இந்நூல் அரபு மொழியைக் கற்க விரும்புவோருக்கு பெரிதும் துணையாக நிற்கக்கூடியது. மிக முக்கியமாக ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் அரபு மொழியைக் கற்க விரும்புபவர்கள் இந்நூலைத் துணையாகக் கொள்ள முடியும்.



ஸர்ஃப் நூல்

தமிழை தாய்மொழியாகக் கொண்டவர்கள் அரபுமொழியின் மிக முக்கியமான ஒரு பகுதியான ஸர்ஃப் கலையைக் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. அரபு மொழியைத் திறம்படக் கற்பதற்கு மிகவும் உறுதுணையாக அமையும் ஸர்ஃப் என்ற அரபு இலக்கணப் பகுதி இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளது. ஆரம்பமாகக் கற்பவர்களுக்கு இப்பகுதி கடினமாக அமைவது இயல்பானது. இதனை இலகுபடுத்தும் வகையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. அடிப்படை வினைகளிலிருந்து அறிந்து கொள்ள வேண்டிய அனைத்து வகையான வினைகளினதும் ஸர்ஃப் செய்யும் முறை சிறப்பாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் அதற்குரிய பயிற்சிகளும் இந்நூலிலே வழங்கப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும். இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார) சான்றிதழ் பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள் இந்நூலினைத் துணையாகக் கொள்ளலாம். இந்தப் பரீட்சைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் அஸ்ஸர்ஃப் எனும் பகுதி இந்நூலிலே உள்ளடக்கப்பட்டுள்ளது.







சந்தர்ப்ப துஆக்கள்



அஹதிய்யா மற்றும் அல்குர்ஆன் மத்ரஸா மாணவர்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய பாடத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்டிருக்கும் நூல். பாலர் பிரிவு முதல் தரம் ஒன்பது வரைக்குமான மாணவர்களுக்குத் தேவைப்படும் சந்தர்ப்ப துஆக்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளது.



பாடசாலைகளுக்கு இக்ரா கல்வி நிலையம் நடத்தும் தமிழ் மொழி மூல அரபு பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள அழையுங்கள்
011 2692839
077 3654794

இஸ்லாமிக் புக் ஹவுஸ் 77, தெமடகொட வீதி கொழும்பு - 09
011-2684851 www.ibh.lk

விளம்பர அனுசரணை
இக்ரா கல்வி நிலையம், த.பெட்டி இல. 750, கொழும்பு
www.iqracolombo.com

எண்: 07 ஜூன், 2013 எழுத்து: 06

அகரம்

உள்ளே...

20

கற்றல் நுணுக்கமும் ஞாபக சக்தியும் 27

12

World Today 23

உலக சூழல் தினம் 06

36

08

பாடத்திட்டம்

கணிதம்	29	தமிழ்	25
விஞ்ஞானம்	33	புலமைப் பரிசில்	39

PUBLIC LIBRARY

பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, முன்னாள் தேசிய கல்வி நிறுவகம்)

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324
பெக்ஸ்: 011 2686030
E-Mail: *editor@aharam.lk*
www.aharam.lk

சந்தா விபரம்
தனிப் பிரதி 40 /-
1 வருட சந்தா 700 /-
6 மாத சந்தா 350 /-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசு இரிதல்

மாணவர்களின் கல்விப் பெறுபேறுகளில் சுய கற்றல் மிகவும் செல்வாக்குச் செலுத்துகின்றது. மிகவும் கெட்டித்தனமான ஒரு மாணவன் ஆசிரியர் கற்பிப்பதனை அவதானிப்பதன் மூலம் 20 முதல் 30 வீதமானவற்றையே உள்வாங்கிக் கொள்கின்றான். மீதி 70 முதல் 80 வீதம் வரையான அடைவுக்குச் சுயகற்றல் இன்றியமையாததாகும்.

சுயமாகக் கற்பது என்பது பாடசாலையில் கற்பிக்கப்பட்டதை ஒழுங்குபடுத்தி தன்வயப்படுத்துதல், உசாத்துணை தேடுதல், வாசித்தல், மீட்டுதல், பயிற்சி செய்தல், மனனமிடுதல் என்பன மட்டுமன்றி நாளை கற்கப் போவதை முன்னோட்டமாக வாசித்தல் போன்ற பல வினைகளைக் கொண்டது.

இவற்றை திறம்படச் செய்வதற்கு ஒரு மாணவன் அல்லது மாணவிக்கு தினமும் ஐந்து முதல் ஆறு மணிநேரங்கள் தேவைப்படும். ஆனால், சுயகற்றலுக்கு நமது மாணவர்கள் ஒதுக்குகின்ற நேரமும், கொடுக்கின்ற முக்கியத்துவமும் மிகவும் குறைவாக இருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மாணவர்கள் சுயகற்றலுக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு சவாலாக இருப்பது மாலைநேர வகுப்புக்களாகும். மாணவர்களின் கற்றலுக்கும் ஆரோக்கியத்துக்கும் அவசியமான உடற்பயிற்சிக்குக் கூட மாணவர்களுக்கு அவகாசம் இல்லாமல் போகின்றது. மாலைநேர வகுப்புக்ளுக்கு மாணவர்கள் செல்வதற்கு பல நியாயங்களை ஏற்படுத்திக் கொண்டாலும் பல ஒழுக்கச் சீர்கேடுகளும் மாலைநேர வகுப்புக்களின் பெயரில் அரங்கேறுவதனைப் பார்க்கின்றோம்.

ஒரு பாடசாலை ஆசிரியர் என்பவர் அவரது திறமையை வெளிக்கொணரும் ஒரு குறிகாட்டியாக தனது மாணவர்களின் பரீட்சை அடைவையே காட்ட முடியும். அவ்வாறாயின் தன்னிடம் கற்கும் மாணவனின் பரீட்சைப் பெறுபேற்றுக்கு தனி உரிமை கொண்டாடும் அருகதை தனக்கே உண்டு என்பதனை சொல்லும் விதமாக தனது கற்பித்தல் பணியை ஒவ்வொரு ஆசிரியரும் மேற்கொள்ள வேண்டும். அதனால்தான் நீங்கள் கற்பித்து முடித்துவிட்டீர்களா என்பதிலும் பார்க்க உங்களிடமிருந்து மாணவர்கள் கற்றுக் கொண்டார்களா என்பதே முக்கியமானது என கல்வியியலாளர்கள் ஆசிரியர்களைப் பார்த்துக் கூறுகின்றார்கள்.

கல்வித் திட்டத்தை வடிவமைத்தவர்கள் பல்வேறு அனுபவங்களுக்கும் பயிற்சிகளுக்கும் உட்பட்டவர்கள். அவர்கள் பல்வேறு பரிசீலனைகளுக்குப் பின்னர் பல விடயங்களையும் கருத்தில் கொண்டே பாடப்பரப்பைத் தீர்மானித்து பாடத்திட்டத்தை வரைகின்றனர். ஆனாலும் பாடப்பரப்பை கற்பித்து முடிக்க முடியாது என்பதனை ஒரு காரணமாகக் கூறி மாணவர்களை பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்லத் தூண்டும் ஆசிரியர்களும் இல்லாமல் இல்லை.

தன்னிடம் கற்கும் ஒரு மாணவன் தான் கற்பிக்கும் அதே பாடத்தைக் கற்பதற்காக இன்னொரு ஆசிரியரிடமும் செல்கின்றான் என்பதைப் போல அவலமான ஒரு விடயம் ஒரு ஆசிரியருக்கு வேறென்ன வேண்டும்?

பாடசாலை கற்பித்தலில் வினைத்திறன் இல்லை என்பதனைப் போலவே ஒரு மாணவன், ஒரு மாணவியைப் பொறுத்தவரை பிரத்தியேக வகுப்பொன்றுக்குச் செல்லும் நிலைமை ஏற்படுவதற்கு அவர்களின் ஆர்வமும் முயற்சியும் அற்ற சோம்பேறித்தனமும் அல்லது தங்களது திறமையில் இருக்கும் நம்பிக்கை ஈனமும் காரணங்களாக அமைகின்றன. எனவே, மாணவர்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வது மிகவும் பிரதானமான ஒரு அடிப்படையாகும். மாணவர்கள் தன்னம்பிக்கை உள்ளவர்களாக வருவதற்கு பெற்றார் மற்றும் குடும்பத்தினரின் பங்களிப்பும் ஆசிரியர்களின் பங்களிப்பும் அவசியமாகின்றன.

ஒரு பாடசாலை வகுப்பறையில் அதிகபட்சமாக 35 அல்லது 40 மாணவர்கள் இருப்பர். இவ்வாறானதொரு கையடக்கமான வகுப்பறையில் ஒரு ஆசிரியரின் நேரடிக் கவனிப்பில் ஒரு விடயத்தைக் கிரகித்துக் கொள்ள முடியாத ஒரு மாணவன் இதை விட அதிகமானோரை அமர்த்தி நடத்தப்படும் பிரத்தியேக வகுப்பில் கிரகித்துக் கற்பதின் சாத்தியத் தன்மையை துணிந்து கொள்ள அதிகமான பெற்றோர் தவறி விடுகின்றனர்.

அதிகமான பொருட்செலவு, பயண நேர விரயம், சிரமம் போன்றவற்றோடு நாளின் முடிவில் பொதுவாக அதிகமான மாணவர்களிடம் எஞ்சுவது உடல் அசதியும் மன உளைச்சலும்தான். இவர்கள் கிடைக்கின்ற சிறிதளவு நேரத்தில் கூட சுயகற்றலை வினைத்திறனுடன் செய்ய முடியாத அளவு சோர்வடைந்து விடுகின்றனர்.

ஆக மொத்தத்தில் மாணவர்களின் கல்வி அடைவில் மிகப் பெரும் பகுதியான சுய கற்றல் என்பது பல காரணிகளினால் பாதிப்புக்குள்ளாகின்றது. அந்தப் பாதிப்புக்களில் இருந்து அவர்களை விடுவித்து கல்வியின் உச்சத்தை எட்டுவதற்கு பெற்றோரும் ஆசிரியரும் கரிசனை கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் அற்புதம் அல்குர்ஆன்

அல்குர்ஆன் கூறும் கதைகள்

மத்யன்வாசிகளின் சகோதரர்

ஷுஐப் (அலைஹிஸ்ஸலாம்)

சென்ற இதழ் தொடர்...

ஸூரா ஹூதில் குறிப்பிடப்படாத பகுதிகளை மாத்திரம் தொகுத்துத் தரலாம் என முயற்சிக்கின்றேன், இன்ஷா அல்லாஹ்.

“மேலும் (வாழ்வின்) ஒவ்வொரு பாதையிலும் (கொள்ளைக்காரர்கள் போல) மக்களை பயமுறுத்துபவர்களாகவும் இறை நம்பிக்கை கொண்டவர்களை அல்லாஹ்வின் பாதையை விட்டுத் தடுப்பவர்களாகவும் இருக்காதீர்கள். மேலும், நேரான வழியை கோணலாக்க முற்படாதீர்கள்! நீங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்த காலத்தை நினைவு கூர்ந்து பாருங்கள். பிறகு அல்லாஹ் உங்களைப் பல்கிப் பெருகச் செய்துவிட்டான். இன்னும் (கண் திறந்து) பாருங்கள்; குழப்பம் விளைவித்தவர்களது கதி என்னவாயிற்று என்பதை. நான் என்னென்ன அறிவுரைகளுடன் அனுப்பப்பட்டுள்ளேனோ அவற்றின் மீது உங்களில் ஒரு பிரிவினர் நம்பிக்கை கொண்டும் மற்றொரு பிரிவினர் நிராகரித்தும் நடப்பீர்களாயின் அல்லாஹ் நமக்கிடையே தீர்ப்பு வழங்கும் வரை பொறுமையுடன் காத்திருங்கள். அவனே தீர்ப்பு வழங்குவோரில் மிகச் சிறந்தவன்” என ஷுஐப் (அலைஹிஸ்ஸலாம்) எடுத்துரைத்தார்கள்.

அவருடைய சமுதாயத்தாரில் ஆணவம் மிகுந்த தலைவர்கள் கூறினார்கள், “ஷுஐபே உம்மையும் உம்முடன் நம்பிக்கை கொண்டவர்களையும் நாங்கள் நிச்சயமாக எங்களுடைய ஊரை விட்டும் வெளியேற்ற வேண்டிவரும். அல்லது நீங்கள் எங்கள் மார்க்கத்திற்குத் திரும்ப வேண்டியிருக்கும்.” அதற்கு ஷுஐப் பதில் தந்தார். “நாங்கள் விரும்பாதவர்களாய் இருந்தாலுமா (எங்களை வற்புறுத்தி உங்கள் மார்க்கத்திற்குத் திரும்பி விடுவீர்கள்?)” “உங்கள் மார்க்கத்திலிருந்து அல்லாஹ் எங்களைக் காப்பாற்றி விட்ட பின்னர் அதன் பக்கமே நாங்கள் திரும்பினால் நாங்கள் அல்லாஹ்வின் மீது பொய்யைப் புனைந்துரைத்தவர்களாய் ஆவோம்! மேலும், நாங்கள் அம்மார்க்கத்திற்குத் திரும்பி வருவது எங்களைப் பொறுத்து (எவ்விதத்திலும்) சாத்தியமானதன்று; எங்கள் இறைவனாகிய அல்லாஹ் நாடினாலன்றி எங்கள் இறைவனின் அறிவு அனைத்தையும் சூழ்ந்திருக்கின்றது. அல்லாஹ்வையே நாங்கள் முழுமையாகச் சார்ந்துள்ளோம். எங்கள் இறைவனே! எங்களுக்கும் எங்களின் சமுதாயத்தாருக்குமிடையில் சரியாக தீர்ப்பு அளிப்பாயாக. நீயே தீர்ப்பு வழங்குபவனாய் இருக்கிறாய்.”

(அவர் கூறியதை) ஏற்க மறுத்து விட்ட அவருடைய சமுதாயத்தைச் சார்ந்த தலைவர்கள் (தமக்கிடையே) கூறிக்கொண்டார்கள்; “நீங்கள் ஷுஐபைப் பின்பற்றினால் நிச்சயமாக அழிந்து போவீர்கள்” ஆனால், (நடந்தது என்னவெனில்) திடுக்குறச் செய்கின்ற ஒரு நில நடுக்கம் அவர்களைப் பிடித்துக் கொண்டது. அவர்கள் தம் இல்லங்களில் முகங்குப்புற வீழ்ந்து கிடந்தார்கள்.

மேலும், ஷுஐப் “என்னுடைய சமுதாயத்தினரே நான் என் இறைவனின் தூதுச் செய்திகளை உங்களுக்கு எடுத்துரைத்து விட்டேன். மேலும், உங்களுக்கு நலன் நாடும் பொறுப்பை நிறைவேற்றி விட்டேன். ஆனால், சத்தியத்தை மறுக்கின்ற சமுதாயத்தவர் மீது நான் எவ்வாறு அனுதாபம் கொள்வேன்?” என்று கூறியபடி (அவ்வூரைவிட்டு) வெளியேறி விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜீத் (இஸ்லாஹி)

عَنْ أَبِي أُمَامَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنَا زَعِيمٌ بِبَيْتٍ فِي رَبَضِ الْجَنَّةِ لِمَنْ تَرَكَ الْمِرَاءَ وَإِنْ كَانَ مُحِقًّا وَبِبَيْتٍ فِي وَسَطِ الْجَنَّةِ لِمَنْ تَرَكَ الْكَذِبَ وَإِنْ كَانَ مَازِحًا وَبِبَيْتٍ فِي أَعْلَى الْجَنَّةِ لِمَنْ حَسَّنَ خُلُقَهُ (أبو داود)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ உமாமா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"தன் பக்கம் உண்மை இருந்தும் விவாதத்தில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொண்டவருக்கு சுவர்க்கத்தின் சுற்றுப் புறத்தில் ஒரு வீட்டைப் பெற்றுத் தருவதற்கும் நகைச்சுவையாகப் பேசுகின்றபோதும் பொய் சொல்வதை விட்டுவிட்டவருக்கு சுவர்க்கத்தின் மத்தியில் ஒரு வீட்டைப் பெற்றுத் தருவதற்கும் எவர் தன் பண்பை அழகாக அமைத்துக் கொண்டாரோ அவருக்கு சுவனத்தின் உயர்ந்த இடத்தில் ஒரு வீட்டைப் பெற்றுத் தருவதற்கும் நான் பொறுப்புதாரியாக இருக்கின்றேன்." (அபுதாவுத்)

சுவனத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இபாதத்களில் மாத்திரம் சீராக இருந்தால் போதாது, பண்பாட்டிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதனை இந்த ஹதீஸிலிருந்து நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

இஸ்லாம் எனும் வீட்டின் அத்திவாரமாக ஈமான் காணப்படுகின்றது. அந்த அத்திவாரத்தின் மீது கட்டியெழுப்பட்டவைதான் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள். இஸ்லாம் எனும் வீட்டை அழகுபடுத்துகின்ற சாதனமாக பண்பாடு காணப்படுகின்றது.

பண்பாடுகள் இன்றி இஸ்லாம் இல்லை எனுமளவுக்கு நபியவர்கள் பல இடங்களில் பண்பாடுகள் தொடர்பாக பேசியிருப்பதைக் காண்கிறோம். அந்த வகையில் பண்பாட்டுடன் தொடர்புபட்ட ஒரு ஹதீஸாகவே மேலுள்ள ஹதீஸும் அமைந்துள்ளது.

தன் பக்கம் உண்மை இருந்தும் விவாதிப்பதை விடுபவருக்கு சுவர்க்கத்தின் சுற்றுப் புறத்தில் ஒரு வீட்டைப் பெற்றுத் தருவதற்கு நபியவர்கள் உத்தரவாதம் அளித்துள்ளார்கள். உண்மையில் மனிதனின் இயல்பான பண்புகளில் ஒன்றுதான் விவாதம் செய்வதாகும்.

விவாதம் செய்வதை இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று விரும்புகின்ற இஸ்லாம் இதனை அதற்கான கடைசி ஆயுதமாகவே பயன்படுத்தச் சொல்கின்றது. அல்லாஹ் இதைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றான்:

"நீர் விவேகத்தைக் கொண்டும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உமது இரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக! அன்றியும் எது மிக அழகானதோ, அதைக் கொண்டு அவர்களுடன் நீர் விவாதம் செய்வீராக."

இங்கு அல்லாஹ் இறுதி வழிமுறையாகத்தான் அழகிய முறையில் விவாதம் செய்யச் சொல்வதை நாம் காண்கிறோம். நல்ல முறையில் விவாதம் புரியும் ஆற்றல் இல்லாவிட்டால் மௌனமாக இருந்துவிட வேண்டும்.

நபியவர்கள் இதனைத் தவிர்ந்து கொள்ளச் சொன்னதன் காரணம் மனிதன் விவாதம் செய்கின்றபோது தனது வெற்றியை இலக்காகக் கொண்டு செயற்படுகின்றான். இதனால் தன்னையே அவன் இழந்து விடுவதுடன் ஷைய்த்தானும் அவனை ஆட்சி செய்யத் தொடங்குவான். இறுதியில் அல்குர்ஆனின் கட்டளைக்கு மாறு செய்யும் நிலைக்கு உள்ளாகின்றான். எனவேதான், நபியவர்கள் தன் பக்கம் உண்மையிருந்தும் விவாதிப்பதை விட்டு விடுங்கள் என்றார்கள்.

எமது பாடசாலை வாழ்க்கையிலும் ஏனைய மாணவர்களுடன் விவாதம் புரிவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட அதிகம் வாய்ப்புண்டு. இச்சந்தர்ப்பங்களிலெல்லாம் நாம் எமது ஈமானை உறுதிப்படுத்தி பிறரை அவமானப்படுத்தக் கூடிய தர்க்கத்தில் ஈடுபடுவதிலிருந்து எம்மைக் காத்துக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸீரா: அழகிய முன்மாதிரி

நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மிக நுணுக்கமான முறையிலே திட்டமிட்டு எதிரிகளை தோற்கடிப்பதற்காகவும் தமது இருப்பை உறுதி செய்து வெற்றி பெறுவதற்காகவும் உஹத் களத்திலே மலைக் குன்றின் மேல் அம்பெறிவதில் தேர்ச்சி பெற்ற 50 பேரை நிலைநிறுத்தி அவர்களுக்கு உறுதியான கட்டளை பிறப்பித்திருந்தார்கள் என்பதை நாம் பார்த்தோம். அவர்களும் அவர்களது பணியை செவ்வனே நிறைவேற்றி அவ்வழியால் 03 முறை எதிரிகள் நுழைய முயன்றபோதும் அவர்களைத் துரத்தியடித்தார்கள்.

பொருளைச் சேகரிப்போம்" என்று கூறி அப்பிரிவின் நாற்பது அல்லது நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் மலையிலிருந்து இறங்கி படையுடன் சேர்ந்து பொருளை சேகரித்தார்கள்.

அப்துல்லாஹ் இப்னு சுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் அவரின் தோழர்களில் ஒன்பது அல்லது அதைவிடக் குறைவானவர்கள் மட்டுமே தங்களுக்கு அனுமதி அல்லது மரணம் வரும் வரை அவ்விடத்திலேயே நிலையாக இருந்துவிட வேண்டுமென்று அங்கேயே தங்கிவிட்டனர். இதனால்

கட்டளை தவறுதல் தோல்விக்கான ஆரம்பம்

களத்திலே தீரத்துடன் போராடிய ஸஹாபிகளுக்கு முன்னால் தாக்குப்பிடிக்க முடியாத குறைஷிப் படை தலைதெறிக்க ஓடியது. இதனால் வெற்றி முஸ்லிம்களுக்குக் கிடைத்தது. எந்தளவுக்கென்றால் யுத்தம் முழுமையாக முடிவடைந்துவிட்டது, தாம் வெற்றி பெற்றுவிட்டோம், நிராகரிப்பாளர்கள் தோல்வியடைந்து விட்டனர். எனவே, கனீமத் பொருட்களை சேகரிப்போம் என முஸ்லிம்கள் நினைத்து அப்பொருட்களை சேகரிக்க முனையும் அளவுக்கு போர்க்களத்தின் நிலைமை காணப்பட்டது. இவ்வளவு விரைவாக யுத்தம் வெற்றியடையக் காரணம் நபிகளாரின் வியூகமாகும்.

வெற்றி அல்லது தோல்வி எது ஏற்பட்டாலும் அம்மலையை விட்டு நகரக்கூடாது என்று அம்பெறியும் வீரர்களுக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள். இவ்வளவு ஆணித்தரமாக நபியவர்கள் கட்டளையிட்டிருந்தும் வெற்றி கிடைத்து எதிரிகளின் பொருட்களை முஸ்லிம்கள் ஒன்று திரட்டுவதைப் பார்த்த அத்தோழர்களில் சிலர் அவர்கள் தங்களுக்குள், "இதோ வெற்றிப் பொருள்! இதோ வெற்றிப் பொருள்! உங்களது தோழர்கள் வெற்றி பெற்று விட் டார்கள். இதற்கு பின்பும் நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள்?" என்று கூறினர்.

இந்நிலையை அவதானித்த அவர்களின் தளபதி அப்துல்லாஹ் இப்னு சுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபியவர்களின் கட்டளையை நினைவூட்டினார். மேலும், "அல்லாஹ்வின் தூதர் உங்களுக்கு கூறியதை நீங்கள் மறந்துவிட்டீர்களா?" என்றும் தோழர்களை எச்சரித்தார். என்றாலும், அவர்களுள் பெரும்பாலானோர் இந்த எச்சரிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவர்கள், "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நாமும் மக்களுடன் வெற்றிப்

முஸ்லிம் படையினரின் பின்பகுதி பாதுகாப்பற்றதாக ஆகிவிட்டது.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தைத்தான் காலித் இப்னு வலீத் எதிர்பார்த்துக் காத்திருந்தார். எனவே, முஸ்லிம்களை பின்புறம் தாக்குவதற்காக அம்பெறியும் வீரர்கள் இருந்த மலையை நோக்கி வேகமாகச் சென்றார். அங்கிருந்த அப்துல்லாஹ் இப்னு சுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களையும் அவரது தோழர்களையும் விரைவிலேயே கொன்றுவிட்டு முஸ்லிம்களின் படையின் பின்புறமாகச் சென்று தாக்கினார். காலிதின் குதிரை வீரர்கள் இதை உணர்த்தும் பொருட்டு பெரும் சப்தமிட்டவுடன், தோல்வியுற்று புறமுதுகுக் காட்டி ஓடிக்கொண்டிருந்த இணைவைப்பவர்கள் தங்களுக்கு ஒரு புதிய முன்னேற்றம் கிடைத்து விட்டதை அறிந்து முஸ்லிம்களை நோக்கித் திரும்பினர். அம்ரா பின்த் அல்கமா என்ற பெண் மண்ணில் வீசப்பட்டிருந்த இணைவைப்பவர்களின் கொடியை உயர்த்திப் பிடித்தாள். அவர்கள் தங்களது கொடியைச் சுழற்றியவர்களாக சிலர் சிலரைக் கூவி அழைத்தனர். பிறகு ஒன்று சேர்ந்து முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் முஸ்லிம்கள் முன்னும் பின்னும் தாக்கப்பட்டனர்.

நபியவர்களின் வியூகமிக்க திட்டமிடலின் கட்டளையை மீறியதன் விளைவாக மாபெரும் அணை உடைந்த வெள்ளமாக எதிரிகள் பாய்ந்து முஸ்லிம்களைத் தாக்கினர். இம்முறையும் தோல்வியடைந்து விட்டோம் என நிராசையடைந்து ஓடிய குறைஷிகள் மீண்டும் ஒன்றிணைந்து முஸ்லிம்களைத் தாக்கப் புறப்பட்டு விட்டனர். வெற்றி பெற்றுவிட்டோம் என்று ஆனந்தத்தில் திளைத்திருந்த முஸ்லிம்கள் நாலா பக்கங்களிலும் சூழ்ந்து கொண்ட எதிரிகள் முன் திக்குமுக்காடிப் போயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





- அலா அஹ்மத் -

உலக சூழல் தினம்

உலகிலேயே வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் முக்கிய நாடாக மொங்கோலியா மாறியுள்ளது. 2013ம் ஆண்டின் உலக சுற்றுச் சூழல் தினத்தின் உலகின் மைய நாடாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்நாடு பசுமைப் பொருளியலை நோக்கி மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. அது இளைஞர்களுக்கு மத்தியில் சூழல் சம்பந்தமான பல விளிப்புணர்வு நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது. 2013ம் ஆண்டிற்கான சுற்றுச் சூழல் தின நிகழ்வு களை நடத்துவதற்கு UNEP இனால் மொங்கோலியா தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

இன்றைய உலகில் முன்னுரிமை கொடுத்து நோக்க வேண்டிய சில முக்கிய விடயங்களை மையப்படுத்தி சில விஷேடமான தினங்கள் சர்வதேச மற்றும் உள்நாட்டு ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. அத்தினத்தில் அவ்விடயங்கள் தொடர்பான விளிப்புணர்வு நடவடிக்கைகளும் செயற்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கடந்த சில தசாப்த காலமாக சுற்றுச் சூழல் சம்பந்தமான விடயங்கள் உலக அரங்கிலே மிக முக்கியமான பேசுபொருளாக மாறியுள்ளன. மனிதனது அனைத்துத் தேவைகளினதும் பிறப்பிடம் எம்மைச் சூழ்ந்துள்ள சூழலே. ஆரம்பத்தில் மனிதனின் பாதுகாப்புக்காக காணப்பட்ட இயற்கைச் சூழல் இன்று மனிதன் பாதுகாக்க வேண்டிய நிலைக்கு மாறியிருப்பதன் காரணமாக ஐக்கிய நாடுகள் தாபனத்தின் (UNO) பொதுச் சபையினால், ஐக்கிய நாடுகள் சூழல் திட்டங்கள் (UNEP) என்ற செயற்குழு 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதுடன், சுற்றுச் சூழல் சம்பந்தமான செயற்திட்டங்கள் வருடா வருடம் அக்குழுவின் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 5ம் திகதி சர்வதேச ரீதியாக சுற்றுச் சூழல் தினம் அனுஷ்டிக்கப்படுவதுடன் சுற்றுச் சூழல் சம்பந்தமான பல வேலைத்திட்டங்களும் இன்று நடைபெறுகின்றது. 1வது சுற்றுச் சூழல் தினம் 1973ம் ஆண்டு அனுஷ்டிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு UNEP இனால் ஒவ்வொரு வருடமும் பிரதான கருப்பொருளில் பல தீர்மானங்களும் செயற்திட்டங்களும் இடம்பெற்று வரும் அதே நேரம் பல நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. உதாரணமாக;

- ♦ துவிச்சக்கர வண்டி அணிவகுப்பு
- ♦ பசுமைத் திட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *மர நடுகை*
- *மீள் பயன்பாட்டு முயற்சிகள்*
- *பாடசாலை கட்டுரைப் போட்டி மற்றும் சுவரொட்டி போட்டிகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை.*

இத்தினத்தில் சூழல் ஒழுங்குபடுத்தல் மற்றும் பொருளாதார திட்டமிடல்கள் என்பவற்றின் அடிப்படையில் குறித்த ஆண்டுக்கான கருப்பொருள் தீர்மானிக் கப்படுகிறது. அந்த வகையில் இவ்வருட கருப்பொருள் 'உணவு விரயமும், உணவு இழப்பும் அற்ற வகையில் நீ சிந்தி; உண்; சேமி' என்பதாகும்.

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உணவு மற்றும் விவசாய தாபனத்தின் (FAO) கணிப்பீட்டின் படி 1.3 பில்லியன் தொன் உணவு வருடா வருடம் விரயமாக்கப் படுகிறது. இது உணவு உற்பத்தியில் 1/3 பங்காகக் காணப்படுகின்றது. இவ் உண வானது சஹாரா, ஆபிரிக்க நாடுகளின் உணவு உற்பத்திக்கு சமமாகும். ஒவ்வொரு வருடமும் 5 வயதிற்குட்பட்ட 20000ற்கும் அதிகமான குழந்தைகள் பசியின் காரண மாக இறக்கின்றனர்.

உலகிலேயே வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் முக்கிய நாடாக மொங் கோலியா மாறியுள்ளது. 2013ம் ஆண்டின் உலக சுற்றுச் சூழல் தினத்தின் உலகின் மைய நாடாகத் தெரிவு செய்யப்பட் டுள்ளது.. இந்நாடு பசுமைப் பொருளி யலை நோக்கி மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. அது இளைஞர்க ளுக்கு மத்தியில் சூழல் சம்பந்தமான பல விளிப்புணர்வு நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது. 2013ம் ஆண்டிற்கான சுற்றுச் சூழல் தின நிகழ்வு களை நடத்துவதற்கு UNEPஇனால் மொங் கோலியா தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. 2012ம் ஆண்டில் பிரேசிலில் இத்தின விஷேட நிகழ்வுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஐ.நா சபையானது உணவு விரயமாக் கப்படுவது தொடர்பான சில உண்மை களை ஆய்வு செய்து முன்வைத்துள்ளது.

அவையாவன:

- உணவு விரயத்தின் தாக்கம் நிதி இழப்புடன் மாத்திரம் தொடர்பானது அல்ல, அது சூழலுடனும் சம்பந்தப்படு கிறது. உணவு விரயமானது இரசாயனப் பொருட்களை விரயமாக பயன்படுத்துவதற்கு வழி அமைக்கின்றது. அதேபோன்று உணவு விரயத்தின் காரணமாக மெதேன் வாவு சூழலில் அதிகமாக உருவாகக் காரணமாகவும் அமைகின்றது. மெதேன் வாயுவானது பச்சைவீட்டு விளைவை ஏற்படுத்துவதில் அதிக பங்களிப்புச் செலுத்து வதுடன் காலநிலை மாற்றங்களுக்கும் இது ஓர் ஊக்கி யாய் தொழிற்படுகின்றது.
- ஒவ்வொரு வருடமும் செல்வந்த நாட்டு நுகர்வாளர்கள் அதிகமான விரய நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இவர்களின் விரய அளவினை சஹாரா, ஆபிரிக்க உணவு தேவையைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தலாம்.
- உணவு இழப்பு, உலக உணவு விரயம் என்பன அதிக வீண் விரயத்திற்கும் வீண் செலவுகளுக்கும் காரணமாகும். இதன் காரணமாக நீர், நிலம், சக்தி, உழைப்பு, மூலதனம் போன்ற வள விரயங்கள் ஏற்படுகின்றன.
- வளர்முக நாடுகளில் ஏற்படும் உணவு விரயம் உணவுச் சங்கிலியின் ஆரம்ப நிலையிலேயே ஏற்படுவதாகும். இது பொருளாதார, முகாமைத்துவ, தொழிநுட்பத் தடைகள் ஏற்படக் காரணமாய் அமைகின்றன. வியாபாரிகளின் உதவிகள் மற்றும் உணவு வழங்கும் சக்திகளின் உறுதி, கட்டுமானப் பணிகள், பிரதான முதலீடுகள், போக்கு வரத்து வசதி, உணவு பெருக்கமடைதல் என்பற்றின் மூலம் இவ் உணவு விரயத்தைக் குறைக்க முடியும்.
- நடுத்தர மற்றும் உயர் வருமான நாடுகளில் உணவு விரய மானது முக்கியமாக உணவுச் சங்கிலியின் கடைசி நிலை யிலேயே ஏற்படுகின்றது. உற்பத்தியாளர்கள் ஒன்று சேர்ந்து விளையும் அளவை அதிகரிக்கும்போதும், வியா பாரிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் மத்தியிலான விளிப் புணர்வு நடவடிக்கைகளாலும் உணவை சேமிக்க முடியும். இதன் மூலம் விரயத்தைக் குறைக்கலாம்.
- ஐக்கிய இராச்சியத்தில் 6.7 மில்லியன் தொன் உணவு வருடா வருடம் விரயமாக்கப்படுவதுடன் 32% உணவு உண்ணப்படுவதில்லை. சிறந்த முகாமைத்துவம் மூலம் உண்ணப்படாத பகுதியையும் உண்ணப் பயன்படுத்தலாம்.

சுருங்கச் சொன்னால், நாம் எமது வாழ்வுக்குத் தேவையான வளங்களை உயர்த்தும்போது எம்மை அறியாமலே விரயத் திலிருந்து தவிர்ந்திருக்க முடியும். சூழலின் வழமும், செயற் பாடுகளும் பல்வேறு பரிமாணங்களில் அசுத்தமடைந்து, விரயமடைந்து மனித வாழ்வுக்கும் ஆரோக்கியத்திற்கும் அச்சுறுத்தலாக அமையும். எனவே, அதனைத் தடுக்க வேண்டிய பொறுப்பு மனிதனாய்ப் பிறந்த எங்கள் ஒவ்வொருவருடைய பொறுப்பும் கடமையுமாகும். எனவே, நாம் சிந்திப்போம், உண்போம், சேமிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களின் பெயர்கள்

முதலாவது வருடம்	– காகித விழா
இரண்டாவது வருடம்	– பருத்தி விழா
மூன்றாவது வருடம்	– தோல் விழா
நான்காவது வருடம்	– மலர் விழா / பழ விழா
ஐந்தாவது வருடம்	– மர விழா
ஏழாவது வருடம்	– சக்கரை விழா
எட்டாவது வருடம்	– கம்பளி விழா / செம்பு விழா
ஒன்பதாவது வருடம்	– மண்கல விழா
பத்தாவது வருடம்	– அலுமினிய விழா / தகர விழா
பதின் மூன்றாவது வருடம்	– பின்னல் விழா
பதினைந்தாவது வருடம்	– பளிங்கு விழா
இருபதாவது வருடம்	– பீங்கான் விழா
இருபத்தைந்தாவது வருடம்	– வெள்ளி விழா
முப்பதாவது வருடம்	– முத்து விழா
நாற்பதாவது வருடம்	– மாணிக்க விழா
ஐம்பதாவது வருடம்	– பொன் விழா
அறுபதாவது வருடம்	– வைர விழா / மணி விழா
எழுபத்தைந்தாவது வருடம்	– பவள விழா
நூறாவது வருடம்	– நூற்றாண்டு விழா

எம்.எஸ்.ஏ. நுஸ்ரா
மத்ரஸதுல் புர்கானிய்யா
மாவனல்லை

அறிய வேண்டியவை

- சத்தமிடத் தெரியாத மிருகம்
  – ஒட்டகச் சிவிங்கி
- பிறந்த அன்றே இறக்கும் உயிரினம்
  – ஈசல்
- வியர்வை இரத்தமாக வெளியேறும் மிருகம்
  – நீர் யானை
- வாழ்நாளில் தூங்காத உயிரினம்
  – எறும்பு
- மிகச் சிறிய முட்டையிடும் பறவை
  – தேன்சிட்டு
- மெழுகைப் பெற உதவும் பூச்சி
  – தேனீ

எஸ்.எல்.எம். அஹ்சான், தரம் 6
தி/ அல்தாரிக் மு.வி.
கந்தளாய்



சீரியலால்



சீரழியும் நேரம்

தொலைக்காட்சியில் நமது நேரத்தை அதிகம் உறிஞ்சும் நிகழ்ச்சிகளில் முன்னிலை வகிப்பது நம் சகோதரிகள், தாய் மார்களின் முழு ஆதரவு பெற்ற சீரியல்களும் திரைபடங்களும்தான்.

மெகா தொடர்கள் நேரங்களை ஏப்பமிடும். இந்த சீரியல்களை நாம் பார்ப்பதால் விளையும் கேடுகளை சற்று சிந்திக்க வேண்டும்.

உதாரணமாக, ஒரு பெண் தினசரி 1/2 மணி நேரம் ஒரு சீரியல் மட்டும் பார்கிறார் என்றால்கூட வாரத்திற்கு 2 1/2 மணி நேரமும் மாதத்திற்கு சராசரியாக 10 மணி நேரத்தையும் வீணாக்குகிறார்.

தொடர்ந்தேர்ச்சையாக தொலைக்காட்சி பார்ப்பதால் கண்கள் ஒரே இடத்தில் தொடர்ந்து நிலை கொள்கின்றன. இதனால் கண்களில் சோர்வு, உடலில் ஒரு வித அயர்வு போன்றவையும் உண்டாகிறது.

இவற்றைப் பார்ப்பதால் பயனற்ற வழியில் நேரம் வீணாகிறது. அந்த நேரத்தில் ஹதீஸ் நூற்கள், மார்க்க விளக்க நூற்களைப் படித்தல் போன்ற விடயங்களை செய்து நேரத்தைப் பயனுள்ளதாகக் கழிக்க முடியுமல்லவா?

"மனிதன் இரண்டு அருட்கொடைகளை வீணடிக்கிறான். அவை ஆரோக்கியமும் ஓய்வும் ஆகும்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதை நாம் எந்த அளவிற்கு உண்மையாக்குகிறோம் பாருங்கள்!

"முதுமை வருவதற்கு முன் நல்லறங்களைத் தேடிக்கொள்" என்ற நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கூற்றின் படி நாம் நம்மால் இயன்றவரை நன்மையைத் தேட முயற்சிக்க வேண்டும். பிறகு நழுவ விட்ட வாய்ப்பிற்காக வருந்திப் பயனில்லை. நாம் சரியாக பயன்படுத்த தவறிய நேரத்திற்காக இறைவனிடம் என்ன பதில் சொல்ல போகிறோம் என்ற உறுத்தல் இருந்தால் நமது நடவடிக்கைகள் மாற்றம் காணும், இன்ஷா அல்லாஹ்.

அல்லாஹ் எங்களையும் உங்களையும் நேரத்தை பயனுள்ள வழியில் செலவிட அருள் புரிவானாக!!!

ஷப்னா ஹுசைன், தரம் 10
வெலம்பொட மு.ம.வி.
வெலம்பொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் அகரம்

பொது அறிவு



- ★ நதிகள் இல்லாத நாடு – **சவூதி அரேபியா**
- ★ அமெரிக்காவின் காந்தி என சிறப்பிக்கப்படுபவர் – **மார்டின் லூதர் கிங்**
- ★ டைட்டானிக் கப்பலை செலுத்திய மாலுமி – **எட்வட் ஜெஸ்மித்**
- ★ CNN, ரொய்டர் என்பன எந்நாட்டின் செய்தி நிறுவனம் – **அமெரிக்கா**
- ★ புனித நாடு என அழைக்கப்படுவது – **பலஸ்தீன்**
- ★ தங்கத்தின் பெறுமதி நிர்ணயிக்கப்படும் நகரம் – **லண்டன்**
- ★ விஞ்ஞானத்தின் தந்தை கலிலியோ பிறந்த இடம் – **இத்தாலி**
- ★ சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் – **ஜவஹர்லால் நேரு**
- ★ கோள்களின் பெயரை வாரநாட்களுக்கு வைத்தவர்கள் – **எகிப்தியர்**
- ★ இந்தியாவின் முதலாவது பெண் ஜனாதிபதி – **பிரதீபா பட்டீல்**
- ★ "மிக்கி மவ்ஸ்" எனும் உலகப் புகழ் பெற்ற காட்டுன் ஓவியத்தை வரைந்தவர் – **வோல்ட் டிஸ்னி**
- ★ ஸ்பைடர் மேன் கதாபாத்திரத்தை உருவாக்கியவர் – **ஜேக் கிர்பி**
- ★ கடல் மட்டத்திற்கு கீழாக நிலம் உள்ள நாடு – **ஹோலந்து**
- ★ நவீன ஓவியங்களின் தந்தை – **பிக்காசோ**

எம்.எம். இம்சாத், தரம் – 10
சிறாஜியா அரபுக் கல்லூரி
ஓட்டமாவடி

புகழ்பெற்ற சில இடங்கள்

தெற்கின் பிரித்தானியா	நியுசிலாந்து
மோட்டார் வண்டிகளின் நகரம்	டெட்றொய்ட், அமெரிக்கா
ஏழு மலைகளின் நகரம்	ரோம்
உலகின் கூரை	பமீர்
இந்தியாவின் வாசல்	பம்பாய் துறைமுகம்
நைலின் நன்கொடை	எகிப்து
மத்திய தரைக்கடலின் திறப்பு	ஜிப்ரோல்டர் நீரிணை
ஐரோப்பாவின் கோழிக்கூடு	நெதர்லாந்து
ஏரிகளின் நாடு	பின்லாந்து
கங்காருவின் நாடு	அவுஸ்திரேலியா
ஐரோப்பாவின் காப்பகம்	பெல்ஜியம்
இந்து சமுத்திரத்தின் முத்து	இலங்கை
அட்ரியாடிகின் ராணி	வெனிஸ் நகரம்
சீனாவின் துயரம்	குவாங்கோ நதி
ஐரோப்பாவின் விளையாட்டிடம்	சுவிட்சர்லாந்து

ஏ.எச். அப்துல் மாஜித்
தரம் 10
அல்அமீன் ம.ம, எலபடகம

பேரீச்சம் பழத்தின் பெருமை

- ஈச்ச மர வகையில் ஒன்றுதான் பேரீச்சம் பழ மரம். இது எமது நாட்டில் அதிகம் இல்லை. எகிப்து, அரேபியா, ஆபிரிக்கா நாடுகளில்தான் அதிகமாக இருக்கின்றன.
- இதன் செம்பழுங்களை வற்றலாக்கினால் கர்ஜ்ஜிரக்காய் என்றும் பழத்தை பேரீச்சம் பழம் என்றும் கூறுகிறோம்.
- இதில் இரும்பு சத்துக்களும் சுண்ணாம்பு சத்துக்களும் விட்டமின்களும் உள்ளன.
- பேரீச்சம் பழத்தை எந்த நேரத்திலும் சாப்பிட முடியும்.
- காசநோயில் உள்ளவர்கள் தினசரி உணவு உண்ட பிறகு இரண்டு பேரீச்சம் பழங்களை சாப்பிட்டு வந்தால் உடலுக்கு நல்லது.
- பேரீச்சம் பழத்தை குழந்தைகளுக்குக் கொடுத்தால் ஞாபக சக்தியை அதிகரிக்கும்.

அஸ்மா நிஸாம், தரம் 9
வெலம்பொட மு.ம.வி.
வெலம்பொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் அகரம்



குருங்கோளில் மிகுந்த ஒளியுடையது	– வெஸ்டா
புளூட்டோ கோள் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு	– 1930
76 ஆண்டுகளுக்கொருமுறை தென்படும் வால் நட்சத்திரம்	– ஹாலி
சூரியனிலிருந்து பூமிக்குள்ள சராசரி தூரம்	– 150 மில்லியன் கி.மீ.
விண்வெளிக்குச் சென்ற முதல் இந்திய விண்வெளி வீரர்	– ரகேஷ் சர்மா
சூரியனைச் சுற்றும் மிகுந்த ஒளியுடைய குருங்கோள்	– வீனஸ்
அண்மையில் இந்தியாவினால் விண்வெளிக்கு செலுத்தப்பட்ட ஏவுகணை	– பிருத்வி
ஆந்திராப் பிரதேசத்திலுள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையம்	– ஸ்ரீ ஹாரிகோட்டோ

அறிந்து கொள்வீர்!

எஸ்.எல். சீனத்துல் பாஹிமா, தரம் 08
தி/ அல்தாரிக் ம.வி.
கந்தளாய்

புதிய தகவல்

- ★ அமுக்கத்தை அளக்கும் கருவியைக் கண்டுபிடித்தவர் – **பஸ்கால்**
- ★ சீமெந்துக்கு போட்லண்டு சீமந்து எனப் பெயர் சூட்டியவர்? **ஜோசப் அஸ்படின்**
- ★ பொன்னிலை மின்காட்டியைக் கண்டுபிடித்தவர் – **ஆபிரகாம் பெனர்**
- ★ இரசப் பாரமானியைக் கண்டுபிடித்தவர் – **தொரி செல்லி**
- ★ வானொலியைக் கண்டுபிடித்தவர் – **மார்கோனி**
- ★ கடல் நீரின் அடர்த்தியை அளக்க பயன்படுத்தப்படும் நீர்மானியின் பெயர் – **போமோ**
- ★ மனித சுவாசப்பையில் உள்ள சிற்றறைகளின் எண்ணிக்கை – **700**
- ★ ஐதரசன் குண்டின் அக வெப்பநிலை – **200000 C^0**
- ★ இக்காலத்தில் வயிற்றோட்டத்தால் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை – **ஏறத்தாழ 5 மில்லியன்**
- ★ ஒரு மனிதனின் வாழ்க்கைக் காலத்தில் அவனது சிறு குடலினூடாகச் செல்லும் உணவின் எடை – **11.5 டொன்**

எச்.எம். பாஹிம்
அல்மஜீதிய்யா அரபுக் கல்லூரி
பொலன்னறுவை

நூல்களும் அவற்றை எழுதியோரும்

கந்த புராணம்	கச்சியப்ப சிவாச்சாரியார்
விளையாடற் புராணம்	புலியூர் நம்பி, பவனந்தி முனிவர்
அரிச்சந்திர புராணம்	வீரகவிராயர்
நளவெண்பா புராணம்	புகழேந்தி
இரகு வம்ச புராணம்	அரசகேசரி
சீறாப் புராணம்	உமறுப் புலவர்
தமிழ் அகராதி	கதிர்வேற்பிள்ளை
வியாசர் விருந்து	ராஜகோபாலச்சாரியார்
மகாபாரதம்	தேவியாசர்
அர்த்த சாத்திரம்	கௌடில்யன்
கீதாஞ்சலி	இரவிந்திரநாத் தாஉர்
பகவத் கீதை	வேதவியாசர்
இராமாயணம்	வான்மீகி, வசிட்டர்
சத்திய சோதனை	மகாத்மா காந்தி
அக்கினி சிறகுகள்	அப்துல் கலாம்
மணிமேகலை	சீத்தலைச் சாத்தனார்
மகா வம்சம்	மகாநாம தேரர்



அமீர் முஹம்மத் சாஜித்
தரம் 10
மட்/அல் முர்ஸித் ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் அகரம்

பொன்மொழிகளில் பெண்மணிகள்

எம்.ஜே.எப். ஜெஸிறா
4ம் வருடம்
பாத்திமா ஸஹ்றா மகளிர் அ.க.
ஓட்டமாவடி

- பெண்களுக்கு பலம் குறைவுதான். ஆனால், அவர்களிடம் உள்ள துணிச்சல் ஓர் ஆணுக்கு உள்ளதை விட அதிகம். **-மகாத்மா காந்தி**
- ஒரு பெண்ணுக்கு அறிவாளியை முட்டாளாக்க முடியும்; முட்டாளை அறிவாளியாக்கவும் முடியும் **- ஜான்சன்**
- பெண்கள் புத்தகம் போன்றவர்கள். அதில் நல்லதும் இருக்கும் கெட்டதும் இருக்கும் **- கிரீன்விச்**
- ஒரு பெண்ணிற்கு அவளுடைய நாணமே அரச கிரீடமாய் அமைகிறது. அவளது கற்போ நீதி செலுத்தும் செங்கோலாகிறது **- பிராங்ளின்**

அணு குண்டு



- ஜப்பான் மீது எப்போது அணுகுண்டு வீசப்பட்டது? 1945 ஓகஸ்ட் 16 ஆம் திகதி
- உலகிலேயே முதல் அணு குண்டு பரிசோதனை நடத்தப்பட்ட இடம் எது? அது எப்போது நடத்தப் பட்டது? அமெரிக்காவின் நியூமெக் ஸிகோ பாலைவனத்தில் அலமக் கோடா எனும் இடத்தில், 1945 ஜுலை 16ஆம் திகதி அதிகாலை 5.30 மணிக்கு
- அமெரிக்கா பரிசோதித்த அணுகுண்டின் ஒளி எத்தனை மைல்களுக்கப்பால் தெரிந்தது? 250 மைல்களுக்கு அப்பால்
- அமெரிக்கா ஹிரோஷிமா மீது வீசிய அணுகுண்டு விமானத்திலிருந்து நிலத்தில் விழ எடுத்த நேரம் எவ்வளவு? 43 செக்கன்

எம்.எம். பாத்திமா
அல்ஹிலால்புர
தம்பாளை

உங்களுக்குத் தெரியுமா?

- உலகில் உள்ள கண்டங்கள்
  1. ஆசியாக் கண்டம்
  2. ஆபிரிக்கா கண்டம்
  3. அவுஸ்திரேலியாக் கண்டம்
  4. ஐரோப்பா கண்டம்
  5. அந்தாட்டிக்கா கண்டம்
  6. வட அமெரிக்கா கண்டம்
  7. தென் அமெரிக்கா கண்டம்
- இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை - பாக்கு நீரிணை. இதன் நீளம் 32கி.மீ.
- இலங்கையின் நீளம் 432 கி.மீ, அகலம் 224 கி.மீ, பரப்பளவு 65525 கி.மீ,
- இலங்கையிலுள்ள மாகாணங்கள் 09, மாவட்டங்கள் 25, இலங்கையில் அதிகளவு மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம் வட மாகாணம்.
- இலங்கை இந்தியாவிற்கு தெற்கே அமைந்துள்ளது. நான்கு புறமும் கடலால் சூழப்பட்டுள்ள தீவு.
- இலங்கையின் வடக்கில் ஆசியாக் கண்டமும் தென் கிழக்கில் அவுஸ்திரேலியா கண்டமும் தெற்கில் அந்தாட்டிக்கா கண்டமும் மேற்கில் ஆபிரிக்கா கண்டமும் அமைந்துள்ளது.

கே. சிம்ளா
புத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sister Rumman

"How much do you know?"

Assalamu alaikum dear friends,

This time we have a big theme, THE OCEAN! Subhanallah!! How BIG the ocean is!!!

I What makes our planet blue? The ocean.

II What makes 71% of the earth? The ocean.

WANT TO EXPLORE THE OCEAN?? COME ON, LET'S DO IT THIS TIME.

Do you know what the vehicle that travels deep under the sea is? The submarine! The word 'marine' is related to the ocean.

Marine animals
Marine birds
Marine pollution
Marine traffic......

Have you heard of these words?



Some sea facts ....

- The biggest ocean on earth is the pacific. It covers 1/3 of the earth
- The corals are wonderful animals of the ocean.
- There are strange looking, giant sized, very tiny and all types of creatures in the ocean.
- The floor of the ocean is called the "ocean bed"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

What pollutes the big ocean?



Of course, it's we who pollute the ocean, as usual. Our industrial wastes, oil and many other careless activities pollute the ocean, and harm its creatures. The jelly fishes, star fishes, octopuses, corals are all creations of Allah. We should protect them all.

Tsunamis, volcanoes, and oceanic earthquakes are some natural disasters that occur in the ocean.

Friends, so have we completed exploring the ocean? NOT AT ALL!

The ocean is HUGE, and it could be always explored more and more!

Your corner



The Human Body

The human body is a super machine. It can do many clever things that other machines cannot do. It can think, feel, speak and write. No other living being can do all these. We must take care of this wonderful body. Our bodies are similar in many ways. We may not look exactly alike, but the basic shapes of our bodies are almost the same. We all have a head, a neck, a main body, hands and legs.

M.N.Fathima Nasrin
Grade-07
St/Andrew's Balika Maha Vidyalaya
Nawalpitiya

Our Mother

Our mother is Mrs. Fathima Deen. She is a teacher. She teaches at B/Al Ilma Muslim Vidyalaya. Her husband's name is Mr. S.K .Deen (Our father). She knows Tamil, Sinhala and English well. She has four lovely kids. Her hobbies are reading and writing. She is known as 'Guruwaiyoor Fathima Hameed' in the world of literature, because she is a good writer as well as a poet. She has written many short stories and poems in the papers. She helps us too, to write articles to the papers, magazines and television. She is very keen in our education. She helps us with our home work and motivates us to be good in the society. She does all the household chores herself. She cooks tasty dishes for us. She wears habaya and fardha. She never misses reciting the Quran and praying. She loves us and our father very much. We, too, love her very much. We wish her a very good life in both worlds.

Atheef Deen Gr-08
Hafsa Deen Gr-06
Athaaf Deen Gr-03
Hadiya Deen L.K.G.
B/Al Ilma Muslim Vidyalaya
Guruthalawa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Poverty

It was a cool and misty morning. The roads were busy with the school boys. They were rushing to reach the school before the bell. Ahmed who was standing near the fence, he was weeping... he had never been to school. He liked to go to school but he had no money.

When he was small, his parents were very poor. So they didn't educate him. He was brought up under poverty, and he had three siblings. All of them were sisters. Although they were poor, they lived a happy and peaceful life.

When Ahmed was thirteen, his mother passed away and when he was fifteen, his father, too, passed away. He was the only one to take care of his sisters. So he started to earn money in many ways, such as farming, carrying loads, selling things etc. But he didn't get enough money to save his family. Most of the time, they were in hunger.

Ahmed's aim was to educate his sisters and bring up them as doctors and teachers. So he sacrificed a lot for them.

Some days later they had no food to eat. And Ahmed didn't have money to buy food. This poverty and hunger continued for a week. No one could help Ahmed. His sisters asked him to go on begging. But Ahmed refused and said "Don't go to beg from people, go and beg from Allah, to show us the right path". And he said, "I'll go and look for a work and food"

When he went out of the house he heard a big noise

To be continued..............

By
Nuskiya Liyaudeen
Hapugastalawa
Ayesha Siddeqa Educational Institute

10 Rules for a better life !

- Never hate, purify your heart.
- Don't worry, rely on Allah.
- Live simply, life will be easy in sha Allah !
- Expect a little, be happy with whatever you got, say Alhamdulillah !
- The more you give, more you get, you will be blessed Insha Allah!
- Always smile, smile is a charity, others will feel happy with you.
- Live with love, love others for the sake of Allah.
- More you pray, the more you will get blessed.
- Share your knowledge, even if you know one verse from the Quran.
- Remember Allah often, your heart will find the rest.

Insha ALLAH

M.S.Mohamed Shamry
Grade 10
T/R.K.M.Sri Koneswara Hindu College
Trincomalee

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

உலக அகதிகள் தினம்



இப்னு சலீம்

இன்று மிருகவதைச் சட்டங்கள், சுற்றுச் சூழல் அழுத்தங்கள், வனவிலங்கு உரிமைகள் என புதிது புதிதாக மனிதன் பேசத் தொடங்கியுள்ள அதே நேரம், மறுபுறம் யுத்தத்தினாலும் இனமுரண்பாடுகளினாலும் அரசியல் நெருக்குதல்களாலும் பல இலட்சக் கணக்கான மக்கள் நாளாந்தம் அகதிகளாக்கப்பட்டுக் கொண்டிருப்பதனை நாம் அறிய முடியுமாக உள்ளது.

2009ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி உலகில் 43 மில்லியன் மக்கள் தம் இருப்பிடங்களை இழந்து அகதிகளாக்கப்பட்டும் இடம்பெயர்ந்தும் உள்ளனர். அதில் 16 மில்லியன் மக்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டவர்கள். 26 மில்லியன் மக்கள் வெளிநாடுகளுக்கு அகதிகளாக வெளியேறிச் சென்றுள்ளனர். அதேபோன்று 2010ம் ஆண்டில் 43.7 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக வேறு ஓர் அறிக்கை தெரிவிக்கின்றது. இன்றும் கூட பல நாடுகளில் பல இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்த வண்ணம் உள்ளனர். உதாரணமாக, சிரியாவில் மாத்திரம் 1.5 மில்லியனுக்கும் அதிகமான மக்களும் மியன்மாரில் ஆயிரத்துக்கும் அதிகமான மக்களும் இடம் பெயர்ந்துள்ளதுடன், லிபியா, ஈராக், மாலி, ஆப்கானிஸ்தான், சோமாலியா போன்ற பல நாடுகளிலும் இவ்வாறு மக்கள் சர்வ சாதாரணமாக அகதிகளாக்கப்பட்டு இடம்பெயர்வதனை நாளாந்தம் அறிய முடியுமாக உள்ளது.

சர்வதேச அரங்கில் அகதிகள் தொடர்பான விழிப்புணர்வுகளும் செயற்திட்டங்களும் நடைபெற்று வருகின்றன. வருடா வருடம் ஜூன் 20ம் திகதி உலக அகதிகள் தினம் அனுஷ்ட்டிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த சில நூற்றாண்டுகளாக உலகில் ஏற்பட்ட யுத்தங்களால் பல கோடி மக்கள் அகதிகளாக்கப்பட்டு இடம்பெயரும் அவல நிலை தோற்றம் பெற்றது. குறிப்பாக 2ம் உலக மகா யுத்தத்தின் காரணமாக பல இலட்சம் மக்கள் அழிக்கப்பட்டதுடன், பல இலட்ச மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். உதாரணமாக, 2ம் உலகப் போரின் பின் ஐரோப்பாவில் மாத்திரம் 40 மில்லியனிற்கும் அதிகமான அகதிகள் காணப்பட்டனர்.

1943ல் Allies என்பவரால் United Nation Relief and Rehabilitation Administration (UNRRA) என்ற அமைப்பு அகதிகளை மையப்படுத்தி அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதுடன், அவ்வமைப்பினூடாக சில செயற்றிட்டங்களும் முன்வைக்கப்பட்டன. இதன்பின் அகதிகள் தொடர்பான பல சட்டங்கள் இயற்றப்பட்டதுடன் பல மாநாடுகள் நடைபெற்றன. உதாரணமாக, Postsdam மாநாடு, Yaita மாநாடு போன்றவற்றைக் குறிப்பிடலாம். என்றாலும், 1947 இந்த UNRRA அமைப்பு பல காரணங்களால் செயலிழந்தது. இதன்பின் International Refugee Organization (IRO)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அமைப்பு தோற்றம் பெற்றாலும் அதுவும் மிக குறுகிய காலத்தினுள் மறைந்து போனது.

இதன் பின்புதான் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பொதுச் சபையினால் 1950ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் திகதி UNHCR (United Nations High Commissioner For Refugees) என்ற அமைப்பு சர்வதேச ரீதியாக அகதிகளுக்கு உதவிகளையும் பாதுகாப்பையும் உறுதியையும் வழங்குவதற்காக உருவாக்கப்பட்டது. இது அகதிகளுக்காக மாத்திமன்றி இடம்பெயர்ந்த மக்கள் நலன்களுக்காகவும் சேவையாற்றி வருகின்றது. இன்று 120ற்கும் மேற்பட்ட நாடுகளில் UNHCR இயங்கிவருவதுடன் இதன் தலைமைக் காரியாலயம் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் அமைந்துள்ளது.

அகதிகள் தினம் பல ஆண்டுகாலமாக உலகின் பல பாகங்களிலும் பல வித்தியாசமான முறையில் அனுஷ்ட்டிக்கப்படுகிறது. குறிப்பாக, ஆபிரிக்க நாடுகளில் மிகப் பரந்த அளவில் இத்தினம் ஜூன் 20ம் திகதியை மையப்படுத்திக் அனுஷ்ட்டிக்கப்படுகிறது. எனவே, ஐக்கிய நாடுகள் சபை இத்தினத்தை சர்வதேச ரீதியாக அனுஷ்ட்டிப்பதற்காக Organization of African Unity என்ற அமைப்புடன் கலந்துரையாடி ஜூன் மாதம் 20ம் திகதியை வருடா வருடம் கொண்டாடுவதாக அறிவித்தது.

2001ம் ஆண்டு முதலாவது உலக அகதிகள் தினம் சர்வதேச ரீதியாக அனுஷ்ட்டிக்கப்பட்டது. அதேநேரம், ரோமன் கத்தோலிக்க திருச்சபையினால் இடம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தினம் 1914ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஜனவரி மாதமும் அனுஷ்ட்டிக்கப்பட்டது.

இன்று இத்தினம் உலகம் பூராகவும் பல வித்தியாசமான நிகழ்வுகளை உள்ளடக்கி அரசாங்கங்களினாலும் சமூக நல பணியாளர்களாலும் பொது மக்களாலும் இடம்பெயர்ந்த மக்களாலும் அனுஷ்ட்டிக்கப்பட்டு வருகின்றது. அதேபோல், இத்தினத்தன்று அகதிகள் தொடர் பான பல விளிப்புணர்வு நடவடிக்கைகளும் செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், ஒவ்வொரு வருடமும் குறித்த ஒரு கருப்பொருளை அடிப்படையாக வைத்து அனுஷ்ட்டிக்கப்படுகின்றது.

இத்தினக் அனுஷ்ட்டானங்களில் பல வித்தியாசமான நிகழ்வுகளில் இடம்பெறுகின்றன. உதாரணமாக, ஐக்கிய இராச்சியத்தில் ஒரு வார காலத்திற்கு கலை கலாசார நிகழ்ச்சிகளும் பல செயற்திட்டங்களும் நடைபெறும் அதேவேளை, அவுஸ்திரேலியாவில் அகதிகள் வாரம் என்ற செயற்திட்டத்தின் மூலம் ஒரு வார காலமாக அகதிகள் தொடர்பான விளிப்புணர்வு நடவடிக்கைகள் நடைபெறுவதுடன், அகதிகள் எப்படி, எவ்வாறான பங்களிப்புகளை நாட்டிற்கு வழங்க முடியும் போன்ற விடயங்களும் இத்தின நிகழ்வுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

> ஒவ்வொரு மனித மனதிலும் "மனிதத்துவம்" எனும் உயரிய பண்பு ஊற்றெடுத்து பரவாதபோது எத்தகைய திட்டங்களாலும் எந்தப் பிரயோசனமும் இல்லை,

UNHCRஇன் உதவியுடன் 2013ம் ஆண்டிற்கான அகதிகள் தினத்தை அனுஷ்ட்டிப்பதற்காக அவுஸ்திரேலியா மற்றும் நியுஸிலாந்து போன்ற நாடுகளில் பாடசாலை மட்டத்தில் மாணவர்களிடையே அகதிகள் தொடர்பாக விளிப்புணர்வு ஏற்படுத்த கலந்துரையாடல்கள், சித்திரப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் போன்றன ஊக்குவிக்கப்படுவதுடன், இதன் மூலம் அகதிகளுக்கு உதவுவதையும் அவர்களது வாழ்வினை மீள்கட்டியமைக்கும் நோக்கத்தினையும் கொண்டுள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. இதேபோன்று சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், சிறு நூல்கள் போன்றனவும் UNHCR இனால் வெளியிடப்பட்டு வருகின்றது.

உலக அகதிகள் மற்றும் இடம் பெயர்ந்தோர் எண்ணிக்கையை குறைப்பதற்காக என்னென்ன புதிய திட்டமிடல்களும் செயற்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டாலும்கூட ஒவ்வொரு மனித மனதிலும் "மனிதத்துவம்" எனும் உயரிய பண்பு ஊற்றெடுத்து பரவாதபோது எத்தகைய திட்டங்களாலும் எந்தப் பிரயோசனமும் இல்லை. நம்மை போல் பிறரையும் மனிதர்களாக மதிக்கும் நிலையும் சமத்துவ சிந்தனைப் போக்கும் ஏனையோர் தொடர்பான சிறந்த புரிதல்களும் அநீதிகள், தீமைகள், கொடுமைகள் மீதான எதிர்ப்புணர்வு வெளிப்படும் போதுதான் அகதிகள் தினம் அதன் நோக்கை அடையும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

வரலாறு

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

10ம் தரம்

01 i. ஆரம்பத்தில் இஸ்லாமியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த 3 பிரதேசங்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்க.

(ஓமான் / எகிப்து / சிரியா / லிபியா / ஈராக்)

(3 புள்ளிகள்)

ii. டில்லி சுல்தானியர் ஆட்சி பலவீனமடைந்தமைக்கான காரணங்கள் 4 தருக. (4 புள்ளிகள்)

iii. மாமன்னர் அக்பரின் சேவைகள் இரண்டை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. இஸ்லாமியரின் ஆட்சியினால் இந்தியாவில் ஏற்பட்ட செல்வாக்குகள் இரண்டை விளக்குக. (6 புள்ளிகள்)

விடைகள்

i. எகிப்து, சிரியா, ஈராக்

ii. அ. பலவீனமான மன்னர்கள் ஆட்சி புரிந்தமை.

உதாரணம்: இப்றாஹீம் லோகி முன் கோபமுடையவராக இருந்தார்.

ஆ. பிற சமயத்தவர்களிடம் ஜெஸியா வரியை வசூலித்தமை.

இ. ரசியா அரசியின் பலவீனமான ஆட்சி.

ஈ. வடமேற்கு இந்தியாவில் மொங்கோலியர்களின் தாக்குதல் இடம்பெற்றமை.

iii. சிறந்த நிருவாகத்தை அறிமுகப்படுத்தியமை.

இந்திய வரலாற்றில் அசோகனுக்கு அடுத்து சிறந்த ஆட்சியை ஏற்படுத்தியவராக அக்பர் விளங்குகிறார். இவர் ஆற்றல் வாய்ந்த நிருவாக முறையைக் கடைப்பிடித்ததே இதற்குக் காரணமாகும். இவர் வரி அறவிடுவதில் பல புதிய முறைகளைக் கையாண்டதால் ஏழை மக்கள் நன்மை அடைந்தனர். இவர் நிருவாகத்தில் 'மன்சத்தார்' முறையைக் கடைப்பிடித்தார். இதன்படி எல்லா அரச ஊழியர்களும் நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்புடையவர்கள். உதாரணம்: அரசனின் செயலாளர் 1000 போர் வீரர்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தராகக் கடமையாற்றினார்.

சிறந்த நீதி முறையைக் கடைப்பிடித்தமை

மாமன்னர் அக்பரின் ஆட்சிக்காலம் சிறந்து விளங்கியமைக்கு அவர் பின்பற்றிய முறைமையே காரணமாகும். அங்கு இனம், மதம், மொழி முதலிய பாரபட்சங்கள் இடம்பெறவில்லை. முஸ்லிம்களுக்கும் முஸ்லிம்கள் அல்லாதோருக்கும் ஒரே வகையான தீர்ப்பே வழங்கப்பட்டது. நீதித்துறைக்குப் பொறுப்பாக திவான் மீர்பஷி என்பவர் நியமிக்கப்பட்டார். இவரது திறமையினால் நீதித்துறை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

iv. இஸ்லாம் பரவியது

இஸ்லாமியரின் ஆட்சி தென்னிந்தியாவில் ஒரு சில பகுதிகளைத் தவிர, ஏனைய பிரதேசங்களில் நிலவியமையால் அதிகமானோர் இஸ்லாத்தைத் தழுவினர். இந்தியாவில் சிந்து, பஞ்சாப், காஷ்மீர், கிழக்கு வங்காளம் போன்ற பகுதிகளில் முஸ்லிம்களே அதிகமாக வாழ்ந்தனர். 1947 இல் பாகிஸ்தான் என்னும் முஸ்லிம் நாடும் 1972 வங்காள தேசம் என்ற முஸ்லிம் நாடும் உருவாகின.

கட்டடக் கலை வளர்ச்சியடைந்தமை

இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சி நிலவியமையால், இஸ்லாமியக் கட்டடக் கலை இந்தியாவில் செல்வாக்குப் பெற்றது. இஸ்லாமிய மன்னர்களால் கட்டப்பட்ட கோட்டைகளும் அரச மண்டபங்களும் பள்ளிவாசல்களும் இஸ்லாமிய கட்டடக் கலையின் சிறப்பை எடுத்துக் கூறுகின்றன. தாஜ்மஹால், ஆக்ராக் கோட்டை, குதுப் மினார் முதலியன இஸ்லாமியக் கட்டடக் கலையின் சிறப்பை வெளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துகின்றன. அக்பரின் மகனான சாஜஹான் தனது மனைவி மும்தாஜின் நினைவாக ஆக்ரா என்ற நகரில் தாஜ்மஹாலைக் கட்டினார். கங்கை நதியின் ஒரு கிளையான யமுனா நதிக் கரையில் அழகிய முறையில் அமைக்கப்பட்ட ஒரு காதல் சின்னமாக தாஜ்மஹால் விளங்கு கிறது. பளிங்குக் கற்களால் ஆன இம்மாளிகை உலகில் உல்லாசப் பிரயாணிகளைக் கவர்வதில் முதன்மை பெறுகின்றது.

11ம் தரம்

01. i. ஜப்பானிய வரலாற்றோடு தொடர்புடைய பின்வரும் நிகழ்வுகளுக்கு உரியவர்களை அதே ஒழுங்கில் தருக.

- சிரேஸ்ட மனிதர் என்று மதிக்கப்படுபவர்.
- *1603* இல் ஆட்சிக்கு வந்தவர்.
- *1583* இல் யுத்தத்தில் மரணமடைந்தவர்.

(3 புள்ளிகள்)

ii. *1853* ஆம் ஆண்டளவில் மேற்கு நாடுகளுக்கு ஜப்பானிய துறைமுகங்கள் அவசியமாக இருந்தமைக்கான காரணங்கள் 4 தருக. (4 புள்ளிகள்)

iii. "டொகொவா ஷோகுன்களின் ஆட்சி ஜப்பானின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது." இதனை 2 உதாரணங்கள் மூலம் விளக்குக. (5 புள்ளிகள்)

iv. மெய்கி சீர்திருத்தத்தினால் ஜப்பானுக்குக் கிடைத்த நன்மைகள் மூன்றை விளக்குக. (6 புள்ளிகள்)

விடைகள்

i. ஹிதேயோஷி, டொகுகாவா இயாஷு, நொபுனகா.

ii. ✓ ஜப்பான் கடலில் கடற் பயணங்கள் அதிகரித்தமை.

✓ பழுதடைந்த கப்பல்களைப் பழுதுபார்ப்பதற்கு

✓ மாலுமிகளின் பாதுகாப்புக்கு

✓ கப்பல்களுக்குத் தேவையான எரிபொருளையும் நீரையும் பெற்றுக் கொள்வதற்கு.

iii. **விவசாயம் வளர்ச்சியடைந்தமை**

ஜப்பானை 700 வருடங்கள் ஆட்சி செய்த டொகுகாவா ஷோகுன்கள் விவசாயத்தை முன்னேற்ற நடவடிக்கை எடுத்தார்கள். இதன் காரணமாக ஜப்பானில் விவசாயம் துரித முன்னேற்றம் கண்டது. முன்பு பயிர் செய்யப்படாத நிலங்கள் பயிர்ச் செய்கையின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. இதனால் விவசாய நிலம் இரண்டு மடங்காக அதிகரித்தது. ஆட்சியாளர்கள் உரப் பாவனையை ஊக்குவித்தமையால் விளைச்சல் அதிகரித்தது. அதிக விளைச்சலை குறைந்த காலத்தில் தரும் பயிரினங்கள் அறிமுகப்பட்டன. புதிய விவசாய உபகரணங்களும் நவீன இயந்திரங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன.

கைத்தொழில் வளர்ச்சியடைந்தமை

டொகொவா ஷோகுன்களின் ஆட்சிக் காலத்தில் கைத்தொழில் வளர்ச்சியடைந்தது. தற்போது ஜப்பான் கைத்தொழில் நாடாக விளங்குவதற்கு அடித்தளமிட்டவர்கள் டொகுகாவா ஆட்சியாளர்களே. அவர்கள் கிராமிய மட்டத்தில் கைத்தொழிலை வளர்த்தார்கள். இதன் காரணமாக கிராமவாசிகள் கைத்தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பைப் பெற்றார்கள். கைத்தொழில் வளர்ச்சி காரணமாக போக்குவரத்து, தொடர்பாடல் முதலிய வசதிகளை கிராமங்கள் பெற்றுக் கொண்டன.

iv. **புதிய யாப்பை அறிமுகப்படுத்தியமை**

ஜப்பானிய முன்னேற்றத்திற்கு புதிய யாப்பு அவசியம் என்று மெய்சிஜி சீர்திருத்தத்தின் போது ஆட்சியாளராக இருந்த பேரரசர் முட்சுஹிதோ கருதினார். இதனால் ஜேர்மனின் யாப்பை ஒத்த ஒரு யாப்பு உருவாக்கப்பட்டு 1889 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த யாப்பு ஜனநாயக வளர்ச்சிக்கு உதவியதுடன் பேரரசரின் நிலையையும் உறுதிப்படுத்தியது. புதிய யாப்பு பிரதிநிதிகள் சபை, பிரபுக்கள் சபை ஆகியவற்றைக் கொண்ட டயட் என்ற பாராளுமன்றத்தை உருவாக்கியது. பிரதிநிதிகள் சபையில் 300 அங்கத்தவர்களும் பிரபுக்கள் சபையில் 500 அங்கத்தவர்களும் இடம்பெற்றனர். இது மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையை வழங்கியது. பேரரசருக்கு பாதுகாப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி விவகாரம், சட்டத்திற்கு அங்கீகாரம் அளித்தல் போன்ற அதிகாரங்கள் வழங்கப் பட்டன.

மானிய முறை ஒழிக்கப்பட்டமை

ஜப்பான் சகல துறைகளிலும் முன்னேற்றம டைந்த நாடாக மாறுவதற்கு மானிய முறை தடையாக அமையும் என்று பேரரசர் கருதி னார். இதனால் பேரரசரால் 1871 இல் மானிய முறை ஒழிக்கப்பட்டது. வர்த்தகம் வளர்ச்சி யடையக்கூடிய நிலையை அவர் ஏற்படுத்தி னார். சந்தை வாய்ப்பு, கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் முதலியன ஏற்படுத்தப்பட்டன. பொருட்களைக் கொண்டு செல்வதை இலகு படுத்த நெடுஞ்சாலைகளும் புகையிரத வீதி களும் அமைக்கப்பட்டன. தபால் தந்தி வசதி யும் ஏற்படுத்தப்பட்டன. 1871 இல் தபால் தந்தி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. 1880 இல் வர்த்தகர்களுக்கு உதவும் 151 வங்கிக் கிளைகள் ஜப்பானில் இருந்தன.

கைத்தொழில் வளர்ச்சியடைந்தமை

மெய்கி ஆட்சியாளர் ஜப்பானிய கைத்தொ ழிலை வளர்க்க நடவடிக்கை எடுத்தார். மூலப் பொருட்களை பிறநாடுகளில் இருந்து இறக் குமதி செய்வதற்கும் முடிவுப் பொருட்களை விற்பதற்கும் பல வசதிகள் பேரரசரால் ஏற்படுத் தப்பட்டன. இக்காலத்தில் மிட்சுய், மிட்சுபிசி, சுமிதோமா, யசுதோ முதலிய பல கைத் தொழில் நிறுவனங்கள் உருவாகின. கப்பல் கட்டும் தொழில் ஜப்பானில் வளர்ச்சியடைந் தது. ஜப்பானில் உருவாக்கப்பட்ட செய்கி (Seiki) என்ற முதல் கப்பல் ஐரோப்பாவை நோக்கி பயணித்தது. மோட்டார் வண்டித் தொழில் இரும்புருக்குத் தொழில், இயந்திர வியற் தொழில் முதலிய பல தொழில்களிலும் ஜப்பான் முன்னேற மெய்கி ஆட்சியாளர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

மாற்று வழிச் சிந்தனை

ஒருநாள் அக்பரும் பீர்பாலும் சாப்பிட்டுக் கொண்டு இருந் தார்கள். அன்றைய ஸ்பெஷல் ஹைதராபாத் எண்ணெய்க் கத்தரிக்காய்! அக்பர் கத்தரிக்காயை ருசித்துச் சாப்பிட்டார், 'பேஷ் பேஷ், இன்னும் ரெண்டு போடுங்க' என்று கேட்டு வாங்கி வெளுத்துக் கட்டினார்.

பீர்பாலுக்கும் கத்திரிக்காய் பிடிக்கும். ஆனால், அவர் இந்த அளவு உற்சாகமாகவில்லை. அவர்பாட்டுக்கு மெது வாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். இதைப் பார்த்த அக்பருக்கு ஆச்சரியம். 'என்ன பீர்பால்? ஒன்றும் பேசாமல் சாப்பிடுகி றீர்கள், இந்தக் கத்தரிக்காய் ரொம்பப் பிரமாதமாக இருக் கிறது, இல்லையா?' என்றார் வாய் நிறையக் கத்திரிக்காயுடன்.

பீர்பால் நாசூக்காகச் சிரித்தார், 'ஆமாம் மஹாராஜா, அதனால்தான், இறைவன் இயற்கையிலேயே அதற்கு ஓர் அழகான கிரீடம் வைத்திருக்கிறான்' என்றார்.

அவர் இப்படிச் சொன்னதும் அக்பருக்கு உற்சாகம் தாங்கவில்லை, 'பலே, பலே, ரொம்ப நன்றாகச் சொன் னீர்கள்' என்று மகிழ்ந்தார்.

இதையெல்லாம் அரண்மனைச் சமையல்காரர் பார்த்துக் கொண்டிருந்தார். 'மஹாராஜாவுக்குக் கத்தரிக்காய் பிடிக்கிறதா? சரி, இனிமேல் அதையே போட்டு மஹாராஜாவை மகிழ்ச்சிப்படுத்த வேண்டியதுதான்!' என்று முடிவு கட்டினார்.

அடுத்தநாள் காலை, பகல், இரவுச் சாப்பாடு என எல்லாவற்றிலும் கத்தரிக்காய். அக்பரும் மகிழ்ச்சியோடு சாப்பிட்டு முடித்தார். மறுநாள், மறுபடியும் கத்திரிக்காய். அக்பருக்குச் சலிப்புத் தட்ட ஆரம்பித்தது. ஆனாலும் குறை சொல்லாமல் சாப்பிட்டார்.

மூன்றாவது நாள், நான்காவது நாள், ஐந்தாவது நாள்.... அதே கத்தரிக்காய், அக்பருக்குக் கோபம் வந்துவிட்டது, இந்தக் கத்தரிக்காய் மாதிரி மோசமான ஒரு காயை நான் சாப்பிட்டதே கிடையாது' என்றார்.

'உண்மைதான் மஹாராஜா. 'அதனால்தான், இறைவன் அதன் தலையில் ஓர் ஆணி அடித்து அனுப்பியிருக்கிறான்' என்றார் பீர்பால். அக்பர் பீர்பாலை முறைத்தார், 'அன்று கத்தரிக்காயை அப்படிப் புகழ்ந்தீங்க. ஆனா இன்று, அதே கத்தரிக்காயை அவமானப்படுத்திப் பேசுரிங்க? என்ன விளையாடுறீங்களா?'

'மன்னிக்க வேண்டும் மஹாராஜா' என்று பணிவோடு கூறிய பீர்பால், 'நான் உங்களிடம்தானே வேலை செய்கிறேன், கத்தரிக்காயிடம் இல்லையே!' என்றார்.

மாற்று வழிச் சிந்தனைக்கு மிக அவசியமான ஓர் அடிப்படை விடயம் இதில் ஒளிந்திருக்கிறது. ஒரே கத்தரிக் காய்தான், அதன் தலையும் ஒரேமாதிரிதான் இருக்கிறது. ஆனால் ஒரு நாள் அதனைக் கிரீடமாகவும், இன்னொரு நாள் ஆணியாகவும் பார்க்கிறார் பீர்பால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால்கள்தான் திறமையை வளர்க்கும்

ஜே.எம். அஸீம் (நளீமி) www.azeemzain.org

மனிதனை சந்திரனுக்கு அனுப்புவோம் என்று அமெரிக்க அதிபர் ஜோன் எப். கென்னடி கூறியபோது அமெரிக்கர்களுக்கு அதைச் செய்து முடிக்கும் திறமை இருக்கவில்லை. செர்க்ஸெய் தேசாய் உலகிலேயே மெல்லிய, நீர் புகாத கடிகாரம் தயாரிக்க முனைந்தபோது அவர்களுடைய எஞ்சினியர்களே அது இயலாத காரியம் என்றுதான் சொன்னார்கள். ஆனால், தேசாய் விடவில்லை. அவருடைய அணியும் சளைக்கவில்லை. கடைசியில் அதே எஞ்சினியர்கள், நம்மிடமும் அந்தத் திறமை ஒளிந்திருக்கிறதே என்றார்கள்.

நம்மால் என்ன சாதிக்க முடியும் என்பதற்கு அளவுகோலாக நாம் இதுவரை சாதித்தவற்றையே வைத்துக் கொள்ளக் கூடாது. அப்போது ஓர் எல்லைக்கு மேல் வளராமல் நின்றுவிடுவோம்.

ஒரேயொரு பட்டனை வைத்து கைத்தொலைபேசியை இயக்குவது பற்றி ஸ்டீவ் ஜொப்ஸ் கனவு கண்டபோது உலகால் அதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. வயரோ எந்தவித இணைப்போ இன்றி ஒருவர் மற்றவருடன் பேசுவது பற்றி கிரஹம்பெல் கூறியபோதும் அதனை உலகம் புரிந்து கொள்ளவில்லை. இதனால்தான் தொலைபேசியைக் கண்டுபிடித்த பிறகு அது பற்றிய செயல்முறை விளக்கமொன்றை அவர் நடத்தினார். அதில் பங்குபற்றிய அமெரிக்க ஜனாதிபதி சொன்னார், "அற்புதமான கண்டுபிடிப்புதான். ஆனால், இதனை யார் பயன்படுத்துவார்கள்."

ஹென்றிபோர்ட் தனது புதிய வாகனங்களுக்கு V8 ரக எஞ்சின்களைத் தயாரிக்கும் புதிய திட்டத்தை சிந்திக்கும் போது அதனை செய்யும் திறமை என்ஜினியர்களிடம் இருக்கவில்லை. இது சாத்தியமில்லை என்று அனைவரும் ஒரே குரலில் கூறினர். ஹென்றிபோர்ட் அதுதான் எனக்கு வேண்டும் எனப் பிடிவாதமாக நின்றபோது அவர்களையறியாமலேயே அவர்கள் அதனைக் கண்டுபிடித்தனர்.

> "நம்மால் என்ன சாதிக்க முடியும் என்பதற்கு அளவுகோலாக நாம் இதுவரை சாதித்தவற்றையே வைத்துக் கொள்ளக் கூடாது. அப்போது ஓர் எல்லைக்கு மேல் வளராமல் நின்றுவிடுவோம்."

சவால் என்று வந்தவுடன், அதை சந்திப்பதற்குத் தேவையான திறமைகளும் தானாகவே வளர்ந்துவிடுகின்றன. திறமைகள் வளர்ந்த பின்புதான் சவால்கள் தோன்றும் என்றில்லை. அதேபோல் திறமையானவர்கள்தான் சவால்களை வெல்வார்கள் என்றுமில்லை. சவால்களை நாம் எப்படி எதிர்கொள்கிறோம் என்பதைப் பொறுத்து சாதனை அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிக்க வேண்டுமா? முதலில் உங்களுக்குத் தேவை சவால். எனவே, சவால்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். சாதனையாளராகுங்கள். சவாலே சமாளி என்பதல்ல. சவாலை சாதனையாக்கு என்பதுதான் உங்கள் தாரக மந்திரமாக இருக்க வேண்டும். ஒரு புரட்சிகரமான புதுமை நடைபெற வேண்டுமென்றால் அதற்கு முதற்படி சவால் (Challenge).

மற்றவர்களெல்லாம் முடியாத காரியம் என்று மூட்டை கட்டி வைத்துவிட்டதை எடுத்து மோதிப் பார்க்கும் மனம் தான் இதற்கு அடிப்படையாகத் தேவை. உங்கள் இலக்கு உயர்ந்ததாக இருக்க வேண்டும். எப்போதுமே அப்படித்தான் இருக்க வேண்டும். அது சாத்தியமில்லை என்று யார் சொன்னாலும் அதனை சவாலாக நினைக்கும் மனப்பக்குவம் வேண்டும்.

பெரிய மருந்து கம்பனியின் பெகேஜிங் பிரிவில் வல்லுநர் ஒருவர் இருந்தார். அவருடைய மேலதிகாரி அவரிடம், இந்த முறை ஆசியாவிலேயே சிறந்த பெகேஜிங் தொழிநுட்ப விருது நமக்குத்தான் கிடைக்க வேண்டும் என்றார். பிறகு ஒருநாள் மற்றொருவர் அந்த வல்லுநரைச் சந்தித்தபோது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? என்று விசாரித்தார். உலகத்திலேயே சிறந்த பெகேஜிங் தொழிநுட்ப விருதுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறேன் என்றார் அவர்.

உங்கள் தலைவர் ஆசிய விருதுக்குத் தானே குறி வைத்திருக்கிறார்.

இது அவருடைய இலக்கு. என்னைப் பொருத்தவரையில் உலக விருதுக்குக் குறைந்த வேறு இலக்கு இல்லை என்றார் வல்லுநர்.

அவருக்கு உலக விருதும் கிடைத்தது.

“அகிலத்தையே அசைத்துப் பார்த்து விடுவோம் புறப்படு” என்றார் ஸ்டீவ் ஜொப்ஸ்.

சவாலை ஏற்பது மாத்திரமல்ல, அதன் சுவையையும் அறிந்திருக்க வேண்டும். சிலர் சவால்களற்ற சுகமான வாழ்வை விரும்புவர். உங்களை இயக்க வைக்கும் சக்தி சவால்களுக்குத்தான் உள்ளது. உங்கள் திறமைகளை வெளிக்கொணரும் ஆற்றல் சவாலுக்குத்தான் உண்டு. உங்களை யாரென்று உங்களுக்கே, ஏன் உலகிற்கே சொல்லும் சக்தி சவாலுக்குத்தான் உள்ளது. சவாலை ஏற்காத யாரும் சாதித்ததில்லை.

“தாண்ட வேண்டிய தடைகள் ஏதும் இல்லாவிட்டால் மனிதனின் அற்புதமான அனுபவம் மகிழ்ச்சியின் ஒரு பகுதியை இழக்கும். கடக்க வேண்டிய இருட்டுப் பள்ளத்தாக்குகள் இல்லாவிட்டால் மலையுச்சியை அடையும்போது பாதி சந்தோஷம் கூட இருக்காது.” ஹெலன் கெல்லர்”

முன்னால் செல்வதைத் தவிர, வேறு வழியில்லை



தோற்று விடுவோமே என்ற அச்சம் காரணமாகத் தான் பலர் முன்னேறவே தயங்குகின்றனர். அவர்களுக்கு முன்னாலுள்ள சவாலை நினைத்ததும் பின்வாங்கிவிடுகின்றனர். ஆனால், வெகு சிலர் பின்னால் செல்வதற்கான எல்லா வழிகளையும் அடைத்துவிடுகின்றனர். அவர்களுக்கு முன்னால் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்றாகி விடுகிறது. செல்கின்றனர், வெல்கின்றனர்.

தாரிக் பின் ஸியாத் ஜிப்ரோல்டரைக் கடந்து வந்து ஸ்பெய்னில் காலடி எடுத்து வைத்ததும் பயணித்து வந்த கப்பல்கள் அனைத்தையும் எரித்துவிடுகிறார். அவர்களுக்குள்ள ஒரேயொரு தெரிவு போராடி வெல்வதே! முன்னேறிச் செல்வதே!

சென்றார்கள், வென்றார்கள். ஆம், மிகக் குறைந்தளவு படையினர் சென்று ஸ்பெய்னை வென்றனர். அதுவும் தளபதி தாரிக் பின் ஸியாதின் வயது 19. இந்த வயதில்தான் தைரியம் இருக்கும். துணிவு பிறக்கும். எதையும் முட்டி மோதும் வயது பதின்ம வயதுதான். எனவே, பதின்ம வயதில் உள்ள நீங்கள் உங்கள் பருவத்தை வீணாக்கிவிடாதீர்கள். முஹம்மத் இப்னு பாதிஹ் கொன்ஸ்தான்தினோபிளைக் கைப்பற்றப் படையெடுத்த போது வயது 17.

தோல்வியைக் கண்டு பயந்துவிடாதீர்கள். வெற்றி அடையத் தேவை உங்கள் திறமைகளை வெளிக்கொணரக்கூடிய ஒரு சவால்தான். அந்த சவால்தான் மிகப் பெரிய சந்தர்ப்பம். அந்த சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைத்துவிட்டால் அதை விடப் பெறுமதியானது வேறொன்றுமில்லை.

எம் அனைவருக்கும் சாதிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். சாதிக்கத் துடிப்பது இளமையின் இயல்பல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், ஒரு சிலரிடம்தான் சாதித்தே தீருவேன் என்ற தீர்மானமான ஆசையும் திட்டவட்டமான எண்ணமும் இருக்கும். அவர்கள் நிச்சயமாக சாதிப்பார்கள். பேஸ்புக்கின் ஸ்தாபகர் மார்க் சக்கர்பர்க், மாவீரன் நெப்போலியன் போனபர்ட், அப்பிளின் ஸ்டீவ் ஜொப்ஸ், மைக்ரோசொப்டின் பில் கேட்ஸ் என இவர்கள் அனைவரின் வெற்றியின் பின்னணி இதுதான். சாதித்தே தீருவேன் என்ற வெறி இவர்களை எத்தனை தடைகள் வந்தாலும் தகர்த்தெறிந்து சாதிக்க வைத்தது.

சாதிக்கத் தேவையான அடிப்படைகள் தகிக்கும் ஆசை, சாதித்தே தீருவேன் என்ற தீர்மானமான எண்ணம் என்பன. இவைதான் சாதனையின் வித்துக்கள். வித்து விருட்சமாவதும் வீணாவதும் தொடரும் எமது முயற்சிகளைப் பொருத்தது.

சவாலை ஏற்கத் தெரியாத ஒருவர்

இது ஒரு வரலாற்றுக் கதை. முன்னொரு காலத்தில் ஒரு மருந்துத் தயாரிப்பாளர் தான் கண்டுபிடித்த ஒரு மருந்தை வைத்து வைத்தியம் செய்ய முற்பட்டார். முடியவில்லை. அந்த மருந்தின் இரகசியத்தை யாரிடமாவது விற்றுவிடுவோமா என்று யோசித்தார். பணம் தேவை வேறு வழியில்லை. தனது கிராமத்திலிருந்து நகரத்திற்குச் சென்றார். மற்றொரு மருந்துக் கடைக்காரரிடம் சென்றார். தனது மருந்தை விளக் கினார். விற்றார்.

அதனை வாங்கியவர் யோசித்தார் இதனை வைத்து என்ன செய்யலாம் என்று. வாங்கியதுதான் வாங்கி விட்டோம் ஏதாவது செய்யலாம் என்று சிந்தித்தார். ஆம் அவர் வாங்கியது ஒரு மருந்தை அல்ல. ஒரு சவாலை. அந்த சவாலை வெல்ல வேண்டும்.

அந்த மருந்துதான் இன்று பல மாற்றங்களுக்கு உட்பட்டு உருவாகியிருக்கும் கொகா கோலா. கொகா கோலாவின் சவாலை ஏற்காத அவர் அதனை விற்றார். சவாலை ஏற்றவர் வென்றார். சவாலை ஏற்றது மாத்திரமல்ல, அந்த சவாலை ஏற்றதும் அவர் எதிர்பார்க்காத அவரது பல திறமைகள் வெளிப்பட்டன. உண்மையில் உலகில் மென்பானத்தை விற்று இந்தளவு முன்னேற முடியும் என்று அன்று அவர் நினைத்திருக்கவில்லை.

வாழ்வில் முன்னேறத் தேவை சவால். தடைகள் தாண்டும் போதுதான் வேகம் அதிகரிக்கும். முட்டிமோதும் போதுதான் புதிய வழிகள் பிறக்கும். சவால்கள் உள்ள பாதைதான் சந்தர்ப்பத்தை அமைத்துத்தரும். எனவே, சாதிக்கத் தேவை ஒரு சவால்.

“ வாழ்வில் முன்னேறத் தேவை சவால். தடைகள் தாண்டும் போதுதான் வேகம் அதிகரிக்கும். முட்டிமோதும் போதுதான் புதிய வழிகள் பிறக்கும். சவால்கள் உள்ள பாதைதான் சந்தர்ப்பத்தை அமைத்துத்தரும். எனவே, சாதிக்கத் தேவை ஒரு சவால். ”

எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவது என்பது ஒரு சவால். 29000 அடி ஏறுவதென்றால் சாதாரண விடயமா? 1952ம் ஆண்டு எட்மண்ட் ஹிலாரி இந்த சவாலை ஏற்றுக்கொண்டார். ஆனால், முதற்தடவை ஏற முயற்சித்து ஏற முடியாமல் தோற்றுப் போனார்.

சில வாரங்களின் பின்னர் அவரை இங்கிலாந்தில் கூட்டம் ஒன்றில் பேச அழைத்தனர். மேடையை நோக்கிச் சென்ற எட்மண்ட் ஹிலாரி, அங்கிருந்த எவரெஸ்ட் சிகரத்தின் புகைப்படத்தைப் பார்த்துக் கூறினார்.

“எவரெஸ்ட்டே! நீ எவ்வளவு வளர முடியுமோ அவ்வளவு வளர்ந்துவிட்டாய். ஆனால் நான் இன்னும் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறேன்.”

ஒரு வருடத்தின் பின்னர் மே 29ம் திகதி அந்த சவாலை வென்றார். எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் மனிதராக வெற்றிக் கொடி நட்டினார் எட்மண்ட் ஹிலாரி.

நீங்களும் எத்தனை தடவை தவறினாலும் தளராத மனதுடன் பயணித்தால் சாதிக்கலாம். சவாலை ஏற்கத் தயாராகுங்கள். சவாலை ஏற்றால் சாதிக்கலாம். சவால் உங்கள் திறமையை வளர்த்துவிடும். வெற்றியைப் பெற்றுத் தரும். எனவே, இதன் பிறகு சவாலை இன்முகத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள். சாதியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேவிட் பெக்காம்



- இங்கிலாந்தின் புகழ்பெற்ற முன்னாள் கால்பந்து ஜாம்பவான்.
- 1992 இல் இவர் இங்கிலாந்து அணியில் இணைந்ததன் மூலம் சர்வதேச கால்பந்தாட்டத்தில் பிரவேசித்தார்.
- இவர் 115 சர்வதேச போட்டிகளில் விளையாடி 17 கோல்களை அடித்துள்ளார்.
- 2013 ஏப்ரலில் நடைபெற்ற பரிஸ் லீக் போட்டியில் பிரான்ஸின் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்காக கிண்ணத்தை வென்று கொடுத்து நான்கு நாடுகளில் லீக் போட்டியை வென்ற முதல் இங்கிலாந்து நாட்டு வீரர் எனும் பெருமையுடன் 2013 மே மாதத்தில் ஓய்வு பெற்றார்.

சர்வதேச உயிரியல் பன்முகத்தன்மை தினம்

22 MAY 2013
INTERNATIONAL DAY
FOR BIOLOGICAL DIVERSITY
WATER & BIODIVERSITY

- இத்தினம் வருடாந்தம் மே 22இல் அனுஷ்டிக்கப்படுகின்றது.
- உயிரியல் பன்முகத் தன்மையின் பிரச்சினைகள் தொடர்பான புரிந்துணர்வு, அறிவு என்பவற்றை மேலோங்க செய்யும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபையால் இத்தினம் பிரகடனம் செய்யப்பட்டது.
- 2013ம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருப்பொருள் 'நீரும் உயிரியல் பன்முகத்தன்மையும்' என்பதாகும்.
- இதுவரை உலகில் 1.75 மில்லியன் உயிரினங்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் இதில் அதிகமாக பூச்சி இனங்களே இனங்காணப்பட்டுள்ளன.
- உலகத்து வறியவர்களில் 70% ஆனோர் நாட்டு புறங்களிலேயே வாழ்கின்றனர்.



திரு. பீ. உமா சங்கர்,
B.Com (jaf), M.com (Kelaniya) (R) Spl.Trd.com,
NDBF, Sri Lanka Technical College - Colombo

சர்வதேச தொலைத் தொடர்பு தினம்



- வருடாந்தம் மே 17இல் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.
- 2013ம் ஆண்டிற்கான இத்தினத்தின் தொனிப்பொருள் 'தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் வீதி பாதுகாப்பினை மேம்படுத்தல்' என்பதாகும்.
- உலகம் முழுவதும் குறிப்பாக, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஏற்படும் வீதி விபத்துக்களில் வருடாந்தம் சுமார் 1.3 மில்லியன் மக்கள் உயிரிழப்பதுடன் மேலும் 30-50 மில்லியன் மக்கள் காயத்திற்கு உள்ளாகின்றனர்.
- 1969 முதல் சர்வதேச தொலைத்தொடர்பு தினம் அனுஷ்டிக்கப்படுவதுடன் 1865இல் முதலாவது சர்வதேச தொலைபேசி மாநாடு நடத்தப்பட்டது.
- இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தலைவர் திரு. லலித் வீரதுங்க ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜிவ்றி பாவா

Geoffrey Bawa

* இலங்கையின் மிகச்சிறந்த கட்டடக்கலை நிபுணராகத் திகழ்ந்தவர்.
* இவரின் 10வது சிரார்த்த தின நிகழ்வு 2103 மே மாதம் நடைபெற்றது.

இத்தாலியின் புதிய பிரதமர்

* இத்தாலியின் புதிய பிரதமராக மத்திய இடது சாரி கட்சியின் பிரதித் தலைவர் என்றிகோ வெடா நியமிக் கப்பட்டுள்ளார்.
* ஐரோப்பாவின் கடுமையான பொரு ளாதார கொள்கைகளை மாற்ற இவர் நடவடிக்கைகள் எடுக்க உள் ளார்.

குறைந்த விலையில் சோலார் விளக்கு: மாணவன் நவீத் சாதனை

இரவில் தடையில்லாமல் மின்சாரம் பெறும் வகையில் ரூ. 1200க்கு (இந்திய விலை) விற்கப் படும் சோலார் விளக்கை ரூ. 400க்கு பெறும் வகையில் கண்டுபிடித்து நவீத் சாதனை படைத் துள்ளார்.

கல்லூரி மாணவர்களிடையே சோலார் மின் உற்பத்தி, அதி நவீன தொழிநுட்பம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த சோலாரியன் அமைப்பு மற்றும் நியூயோர்க்கைச் சேர்ந்த ICCC சென்னை பிரிவு என்பன இணைந்து செயல்படுகின்றன.

தரமணியில் கல்லூரி மாணவர்களுக்கு இடையே சோலார் அறிவியல் தொழில் நுடபம், புதிய கண்டு பிடிப்புகள் குறித்து போட்டிகள் நடத்தின. 20 கல்லூரிகளைச் சேர்ந்த 65 குழு மாணவர்கள் பங் கேற்றனர். தனி நபராகவும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

முதலிடம் பிடித்த பி.எஸ். அப்துர் ரஹ்மான் பல்கலைக்கழக ICCC 2ம் ஆண்டு மாணவன் நவீத், சந்தையில் ரூ. 1200க்கு விற்கப்படும் சோலார் விளக்கை ரூ. 400க்கு பெறும் வகையில் கண்டு பிடித்துள்ளார். இது குறித்து நவீத் கூறுகையில், "முற்றிலும் பழைய பொருட்களைக் கொண்டு இந்த சோலார் விளக்கு செய்துள்ளேன். சோலார் பேனல், பேட்டர் பயன்படுத்தியுள்ளேன். பெரிய சோலார் விளக்கு பயன்படுத்தும்போது, பேனல் மற்றும் பேட்டரியை மாற்றிக் கொள்ளலாம். 3 வருடத்திற்கு ஒரு முறை ஒளியில் சார்ஜ் ஆகி விடும். இரவில் தடையில்லாமல் மின்சாரம் பெற முடி யும்" என்றார்.

இது பற்றி சோலார் மின் உற்பத்தி பொறியியல் வல்லுநர் ஆர். சரவண பெருமாள் கூறியதாவது:

"செலவைக் குறிக்கும் வகையில் இந்த சோலார் விளக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. செல்போன், டெலிபோன், கணினி உள்ளிட்ட மின்னணு பொருள்களின் கழிவுகள் அதிகரித்து வருகின்றன. தற்போது மறுசுழற்சி என்பது அவசியமான ஒன்று. மாணவர் கண்டுபிடித்த இந்த சோலார் விளக்கில் பயனுள்ள பழைய வயர், டெலிபோன் போர்ட் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால், தரம் குறையப் போவதில்லை. இந்த தொழில் நுட்பத்தை அரசே ஏற்று, சோலார் விளக்குகளை தயாரித்து பயன்படுத்தலாம். இதை பயனுள்ள வகையில் குடிசைத் தொழிலாகவும் மாற்றலாம். கிராமங்களில் இரவில் மின்சார வசதியில்லாமல் தவிக்கும் மக்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆனால், நகர மக்களுக்கு பயன்படுத்த வேண்டுமென்றால், பெரிய அளவில் சோலார் விளக்குகள் தேவை. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் கிராம மக்களுக்கு வழங்கலாம்" என்றார்.

நன்றி: சமரசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியும் இலக்கியமும்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: நஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

பகுதி ii ஆக்கத்திறன்: கடிதம் எழுதுதல்

- கடிதம் எழுதும்போது புள்ளிகளைப் பெற கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய தகவல்கள்
  - விடயத்தை (வினாவை) மனதில் தெளிவாக விளங்கிக் கொள்ளல்.
  - கடித வகையைப் புரிந்து கொள்ளல்.
  - அமைப்பைப் பேணல். (முகவரி, விளிப்பு...)
  - குறியீடுகளைக் கவனித்தல். {விளிப்புக் குறி (!) காற்புள்ளி (,) முற்றுப்புள்ளி (.) தேவையானவை}
  - சொற்களின் எண்ணிக்கையை மனங் கொள்க.
  - தெளிவாக எழுதுதல்.
  - வாக்கியப் பிழையின்றி எழுதுதல்.

- கடித வகை
  - உறவு முறை
  - தொழில் முறை

தற்காலப் பயன்பாட்டுக்கமைய

கடித முறை
- உறவு முறைக் கடிதம்
- தொழில்முறைக் கடிதம்
- மின்னியல் கடிதம்

- உறவுமுறைக் கடிதமாகக் கருதத்தக்கவை:
  - கெழுதகைமைக் கடிதம்
  - வாழ்த்துக் கடிதம்
  - நன்றி அறிவிப்புக் கடிதம்
  - அனுதாபக் கடிதம்
  - அழைப்புக் கடிதம்
- நட்பாடற் கடிதம் எனப்படுவது:
  - கெழு தகைமைக் கடிதம்
  - நட்பு முறைக் கடிதம்

- தொழில்முறைக் கடிதமாகக் கருதத்தக்கவை:
  - செய்தித்தாள் கடிதம்
  - தகவல் கேட்கும் கடிதம்
  - விண்ணப்பக் கடிதம்
  - அனுப்பாணைக் கடிதம்
  - முறைப்பாட்டுக் கடிதம்
- மின்னியல் கடித வகைகள்:
  - மின்னஞ்சல் (E-Mail)
  - தொலை நகல் (Fax)
  - சுருக்கத் தொடர்பு சேவை (SMS)
- கடித உறுப்புகள்

கடித உறுப்புகள்

உறவுமுறை	தொழில்முறை
i. தலைப்பு	i. முகவரி (அனுப்புபவர்)
ii. விளிப்பு	ii. முகவரி (பெறுபவர்)
iii. செய்தி	iii. விளிப்பு
iv. முடிப்பு	vi. தலைப்பு
v. ஒப்பம்	v. உடல் (செய்தி)
	vi. முடிப்பு
	vii. ஒப்பம்

- கடித அமைப்பு:

உறவு முறை

முறை 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை 2



குறிப்பு: செய்தி/ விடயம் பந்தி அமைப்பைப் பேணி எழுதும்போது நேர்த்தியும் தெளிவும் பெறும்.

தொழில்முறை

முறை 1



முறை 2



- பத்திரிகைகளுக்கு எழுதும் சந்தர்ப்பம்:
  - உமது ஆக்கத்தைப் பிரசுரிக்க வேண்டி பத்திரிகை ஆசிரியருக்கு நீர் எழுதும் கடிதம் 'தொழில்முறை' கடித வகையிலேயே அடங்கும்.

அமைப்பு



- கவனிக்க:
  - கடிதத்துக்குள் ஆக்கம் எழுதப்படுவதை விட கடிதத்தை முடித்துவிட்டு, வினாவில் கூறப்பட்ட ஆக்கத் தலைப்பை கீழே எழுதி, ஆக்கத்தை விரிவாக எழுதுதல் வேண்டும்.
  - கடித அமைப்புக்கும், ஆக்க உள்ளடக் கத்துக்கும், சொற்களின் அளவுக்குமாக புள்ளிகள் வழங்கப்படும்.
  - கடிதத் தொடக்கம் முதல் உமது ஆக்க முடிவு வரை சொற்களின் எண்ணிக்கை கணிக்கப்படும்.
- தொழில்முறைக் கடிதத்தில் கவனிக்க வேண்டிய அம்சங்கள்:
  - சுருக்கமாகயிருத்தல்
  - கண்டனம் செய்யலாம். ஆனால், நல்லதைப் பாராட்டல்.
  - எடுத்துக்கொண்ட விடயம் ஆரம்பத்திலே கூறப்படுதல்.
  - கருத்துத் தெரிவிக்கும் விடயத்தில் உமது நிலைப்பாட்டை எழுதுதல்.
  - சமநிலை பேணப்படுதல் (கோபத் தொனி, வசை மொழி தவிர்த்தல்)

(32ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org





கற்றல் நுணுக்கமும் ஞாபக சக்தியும்

ஹனீபா ஏ.வஹாப் (இஸ்லாஹி)

அதிகரித்துவரும் அறிவியல் ஆராய்ச்சி, விஞ்ஞான தொழிநுட்பத்தின் விந்தையான வளர்ச்சி போன்றன காரணமாக மனித வாழ்க்கையுடன் தொடர்புபட்ட பல்வேறு துறைகளிலும் புதிய மாற்றங்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் நிகழ்ந்து வருகின்றன. விளைவாக, மனிதன் பல்வேறு நன்மைகளையும் அதற்கு சற்றும் குறையாத அல்லது நன்மையைவிட அதிகமான தீமைகளையும் சந்தித்து வருகின்றான் என்பதை இன்று யாவரும் உணர்கின்றனர்.

இத்தகைய நவீன மாற்றங்கள் உலகளாவிய ரீதியில் கல்விக் கொள்கை, கற்றல்- கற்பித்தல் முறைகள் போன்ற விடயங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, நவீன தொலைத் தொடர்பு சாதனங்களின் அறிமுகம், பொழுதுபோக்கு சாதனங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் போன்றன மாணவர்களின் இயல்பு வாழ்க்கை, வாழ்க்கைப் போக்கு மற்றும் கல்விச் சூழல் போன்ற வற்றிலும் கணிசமானளவு மாற்றங்களை உண்டு பண்ணியுள்ளன. இதனால், மாணவர்களின் கல்வி வாழ்க்கை சவால் மிக்கதாக மாறிவருகின்றது. கற்றல், மீட்டல், ஞாபகத்தில் வைத்து பின்னர் பரீட்சைகளிலும் சொந்த வாழ்க்கையிலும் பிரயோகித்தல் போன்ற விடயங்ளைக் கச்சிதமாக மேற்கொள்வதில் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். பெரும்பாலான மாணவர்கள் செய்வதறியாது திக்குமுக்காடுகின்றனர். இதனால் வாழ்வில் நம்பிக்கையிழந்து சோர்ந்துவிடும் அபாயமும் காணப்படுகின்றது.

இதற்கு மத்தியிலும் ஒரு மாணவன் தான் நன்றாகப் படித்து வெற்றி பெற வேண்டும் என ஆசைப்பட்டால் நிச்சயமாக அவனால் தன் ஆசையை அடைந்து கொள்வதற்கான பல வழிமுறைகளும் இல்லாமல் இல்லை. பல சோலிகளுக்கு மத்தியில் தனது ஞாபக சக்தியை மேம்படுத்தி தான் எதிர்நோக்கும் பரீட்சைகளிலும் நடைமுறை வாழ்விலும் பிரயோசனமடைய எண்ணம் கொண்டுள்ள ஒரு மாணவன் கவனம் செலுத்த வேண்டிய சில விடயங்களை இங்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

வகுப்பறைக் கற்றல் யுக்திகள்

பொதுவாக ஒரு வகுப்பறையில் பின்வரும் கற்றல் யுக்திகள் இடம் பெறுகின்றன:

1. வகுப்பறையில் ஆசிரியர் பாடப் புத்தகத்தை விளங்கப்படுத்தல்.
2. ஆசிரியர் வகுப்பறையில் படங்கள் மற்றும் செய்முறை ரீதியாக ஒரு விடயத்தை காட்சிப்படுத்தி செய்து காட்டுதல்.
3. ஆசிரியர் பாடக் குறிப்புகள் அடங்கிய டியுட்கள்.
4. ஆசிரியரால் முன்மொழியப்படும் வேறு உசாத்துணை நூல்கள்.
5. ஆசிரியர் மாணவர்களிடம் வினாக்களைக் கேட்டல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஏனைய மாணவர்கள் ஆசிரியரிடம் கேள்வி கேட்பதையும் ஆசிரியர் அதற்குப் பதிலளிப்பதையும் செவி மடுத்தல்.

7. வகுப்பறையில் இடம்பெறும் குழு வேலை மற்றும் குழுக் கலந்துரை யாடல்.

8. வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியிலும் சகபாடிகளுடன் ஏற்ப டுத்திக் கொள்ளும் சாதாரண தொடர் புகள்.

9. வகுப்பறையில் செயன்முறை ரீதியி லான வேலைகளில் ஈடுபடுதல்.

10. வகுப்பறையில் மேற்கொள்ளப்படும் பாடத்துடன் தொடர்பான பயிற்சிகள்.

11. பாடவேளைக்குப் புறம்பாக மேற் கொள்ளப்படும் ஒப்படைகளும் அவற்றை வகுப்பறையில் சமர்ப்பித் தலும்.

சில உயர் தரமான பாடசாலைகளி லுள்ள வகுப்பறைகளில் இவற்றைவிட புதிய, புதிய யுக்திகளும் இடம்பெறலாம். எவ்வாறாயினும் ஒரு மாணவன் இவ்வி டயங்களில் உயிரோட்டமாகவும் உணர்வு பூர்வமாகவும் பங்கெடுக்கும் போது குறிப்பிட்டளவு புதிய விடயங் களைக் கற்று, அவற்றை இலகுவாக ஞாபகத்தில் பதிந்து கொள்கிறான். இவ் விடயங்களை ஒரு மாணவன் கணக் கெடுக்காமல் உதாசீனம் செய்வானா னால் கற்றுக் கொள்ள வேண்டிய பல முக்கியமான விடயங்களைக் கற்றுக் கொள்ளத் தவறுவதுடன் கற்றுக் கொண்ட ஒரு சில விடயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கும் சிரமப்படு வான் என்பதே உண்மையாகும். தவிர, ஞாபக சக்தியைக் கூட்டிக் கொள்வ தற்கான செயற்பாடுகளிலும் ஈடுபடுவ தற்கு மேற்குறிப்பிட்ட விடயங்கள் அடிப்படையானவை என்பதால் இவற் றில் சரியன கரிசனை செலுத்தத் தவறி னால் காலவோட்டத்தில் கற்றல் என்ற விடயம் நஞ்சாக மாறுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும். எனவே, ஒரு மாணவன் வகுப்பறைக் கற்றல் யுக்திகளில் கவனமாகவும் அக்கறையாகவும் இருக்க வேண்டும்.

கற்றல் பிரமிட்

மாணவர்களின் கற்றல் யுக்திகளும் அதன்போது ஞாபகத்தில் நிற்கும் வீதத்தையும் பல அறிஞர்கள் ஆய்வு செய்து சில மாதி ரிகளை முன்வைத்துள்ளனர். அவற்றைப் பின்வரும் கற்றல் பிரமிட் (Learning Pyramid) சுட்டிக்காட்டுகிறது:



- இப்பிரமிட்டில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் ஒரு மாணவன்
- வகுப்பறையில் நடைபெறும் விரிவுரைகளிலிருந்து 5%
- வாசிப்பதன் மூலம் 10%
- செவிமடுத்தல் மற்றும் பார்த்தல் மூலமாக 20%
- முன்வைத்தல் மூலமாக 30%
- குழுக் கலந்துரையாடல் மூலம் 50%
- செயற்படுத்துவதனூடாக நடைமுறைப்படுத்தல் மூலம் 75%
- பிறருக்குக் கற்றுக் கொடுத்தல் அல்லது கற்றதை உடனடி யாகப் பயன்படுத்தல் மூலம் 90% மும் ஞாபகத்தில் வைத்துக் கொள்கின்றான்.

எனவே, இன்றைய சவால்கள் நிறைந்த சூழலை நீங்கள் இலகு வாக எதிர்கொள்ள வேண்டுமென்றால் வகுப்பறையில் ஆசிரியர் கற்றுத் தரும் விடயங்களுடன் மாத்திரம் நிறுத்திக் கொண்டால் போதாது. இங்கு குறிப்பிட்ட ஏனைய அம்சங்களையும் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.

எட்கார் டேலின் அனுபவக் கூம்பு (Dale's Cone of Experience)

கலாநிதி எட்கார் டேல் என்பவர் கென்டக்கி பல்கலைக்கழ கத்தில் கல்வியை நவீன மயப்படுத்தல் என்ற துறையின் உதவிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடாதிபதியாக இருந்தவர். இவரால் முன்வைக்கப்பட்டதே அனுபவக் கூம்பு என்ற கற்றல், கற்பித்தல் தொடர்பான கோட்பாடு.

கற்பித்தலுக்கான மாதிரி மற்றும் கற்றல் செயன்முறை என்பவற்றுடன் தொடர்புபடுகின்ற பல்வேறு கோட்பாடுகளை உள்ளடக்குகின்ற ஒரு முன்மாதிரி அம்சமே டேலின் அனுபவக் கூம்பாகும். செவிமடுத்தல், வாசித்தல், அவதானித்தல் போன்றவற்றுக்கு மாறாக செயற்படுத்துவதினூடாக அதிகமான தகவல்களை மாணவர்கள் ஞாபகத்தில் தக்கவைத்துக் கொள்கிறார்கள் என்ற கோட்பாட்டை எட்கார் டேல் என்பவர் 1960களில் முன்வைத்தார். இவருடைய ஆய்வு அனுபவக் கூம்பின் விருத்திக்கு இட்டுச் சென்றது.

இன்று, இந்த செயல் மூலமாக கற்றுக் கொள்தல் என்பது அனுபவக் கற்றல் (Experiential Learning) அல்லது செயன்முறைக் கற்றல் (Action learning) என அறியப்படுகின்றது.

டேல் தான் விருத்தி செய்த அனுபவக் கூம்பில் குறிப்பிடும் விடயங்களை நோக்குவோம்.

மனிதர்கள் சாதாரணமாக பின்வரும் செயற்பாடுகளினூடாக குறிப்பிடப்படும் வீதத்தில் ஞாபகத்தை தக்கவைத்துக் கொள்கின்றனர் என்பதை டேல் விருத்தி செய்த அனுபவக் கூம்பு தெளிவுபடுத்துகிறது.



1. வாசித்தல் 10%
2. செவிமடுத்தல் 20%
3. பார்த்தல் 30%
4. செவிமடுப்பதோடு பார்த்தல் 50%
5. வாயால் சொல்வதுடன் எழுதுதல் 75%
6. ஒரு விடயத்தைக் செய்து கொண்டு அதைச் சொல்லுதல் 90%

> செவிமடுத்தல், வாசித்தல், அவதானித்தல் போன்றவற்றுக்கு மாறாக செயற்படுத்துவதினூடாக அதிகமான தகவல்களை மாணவர்கள் ஞாபகத்தில் தக்கவைத்துக் கொள்கிறார்கள் என்ற கோட்பாட்டை எட்கார் டேல் என்பவர் 1960களில் முன்வைத்தார்.



எனவே, தற்கால சூழலில் ஒரு மாணவன் தன்னுடைய ஞாபக சக்தியைக் கூட்டிக் கொள்ள வேண்டுமென்றால் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள வகுப்பறைக் கற்றல் நுணுக்கங்கள், கற்றல் பிரமிட் மற்றும் டேலின் அனுபவக் கூம்பு ஆகிய விடயங்களை முழுமையாக உள்ளத்தால் ஏற்று அவற்றை நடைமுறையில் கொண்டுவர முயற்சிப்பது அவசியம்.

சதாவும் தேவையற்ற, பிரயோசனமில்லாத போழுதுபோக்குகளில் தமது காலத்தைக் கழித்த மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்ட விடயங்களில் கவனம் செலுத்தி தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பது ஆரம்பத்தில் சிரமம் தரக்கூடியதாக இருக்கலாம். ஆனால் பழக்கப்படுத்திக் கொண்டால் நிறைவான மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் கற்றலில் ஆர்வத்தைத் தூண்டக் கூடியதாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகுதி A இல் 5 வினாக்களுக்கும், பகுதி B இல் 5 வினாக்களுக்குமாக 10 வினாக்களுக்கு மாத்திரம் விடைதருக.

பகுதி A

01.

Bank A
நிலையான வைப்புகளுக்கு 15% எளிய வட்டி வழங்கப்படும்

Bank B
நிலையான வைப்புகளுக்கு 14% கூட்டு வட்டி வழங்கப்படும்

"Sandimal" தன்னிடமிருந்த ரூ. 36,000யை சம பகுதிகளாக இரு வங்கிகளிலும் முதலீடு செய் கிறார்.

i. Bank A இல் இரு வருட இறுதியில் கிடைக்கும் வட்டித் தொகை யாது. (3 புள்ளிகள்)

ii. Bank B இல் அவரது கணக்கில் இரு வருட இறுதியில் இருக்கும் தொகை யாது? (5 புள்ளிகள்)

iii. இவ்விரு வங்கிகளில் எதில் முதலீடு செய் வது அவருக்கு இலாபமாக இருந்தது. (2 புள்ளிகள்)

02. சார்பு $y=(x-a)^2-1$ இன் x இன் பெறுமானங்களுக்கு y மாறும் விதம் தரப்பட்டுள்ளது.

x	-1	0	1	2	3	4	5
y	8	3	0	-1	0	3	8

a) i. $x=0$ ஆகும் போது y இன் பெறுமானம் யாது?

ii. வரைபினை வரைக.

b) i. சார்பின் இழிவுப் பெறுமானம் யாது?

ii. தரப்பட்ட சார்பின் சமன்பாட்டில் $x=0,\ y=3$ ஆகும் போது a இன் பெறுமானம் யாது?

iii. சார்பு மறையாகவும் அதிகரிப்பதுமான x இன் பெறுமான வீச்சு யாது?

iv. சார்பின் உயர்வுப் பெறுமானம் 1 ஆகவும் சமச்சீர் அச்சின் சமன்பாடு 2 ஆகவும் உள்ள வரைபின் சமன்பாட்டினை நீர் வரைந்த வரைபில் அவதானித்து உய்த்தறிக.

03. i. சுருக்குக. $\frac{1}{x}+\frac{3}{(x-2)}$ (4 புள்ளிகள்)

ii. பொ.ம.சி. காண்க. $(t^2-9),\ 3t(t+3)$ (3 புள்ளிகள்)

iii. விரித்து எழுதுக. $(4y-1)^3$ (3 புள்ளிகள்)

04. ஒருவர் A எனும் மரத்தடியிலிருந்து 40^0 திசை கோளில் $120m$ பயணம் செய்து கோயில் B யை அடைகிறார். பின்னர் அங்கிருந்து 130^0 திசைகோளில் $50m$ தூரம் சென்று கிணறு C யை அடைகிறார். இதனைக் காட்டும் அளவிடைப் படம் உருவில் தரப்பட்டுள்ளது.



i. $A\hat{B}C$ இன் பெறுமானம் யாது? (2 புள்ளிகள்)

ii. AC இன் நீளத்தை காண்பதன் மூலம் மரத்திற்கும் கிணற்றுக்குமிடையிலான தூரத்தை m இல் தருக. (4 புள்ளிகள்)

iii. A யிலிருந்து C இன் திசை கோள் யாது? (4 புள்ளிகள்)

05. i. காரணி காண்க. $k^2-13k-48$ (3 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

ii. தரப்பட்ட செங்கோண முக்கோணி ABC இன் செம்பக்கம் a எனின் $a=\sqrt{5x^2-2x+1}$ இற்கு சமமாகும் எனக் காட்டுக.



(3 புள்ளிகள்)

iii. தீர்க்க $2x-y=-5$

$3x+2y=3$

(4 புள்ளிகள்)

06. வெதுப்பகம் (Bakery) ஒன்றில் குறித்த நாட்களில் தயாரிக்கப்பட்ட கறி Bunகளின் எண்ணிக்கை பற்றிய தகவல் கீழே தரப்பட்டுள்ளது.

வகுப்பாயிடை	நடு பெ x	டிறன் f	fx
140-160		2	
160-180		3	
180-200		9	
200-220		13	
220-240		8	
240-260		5	
		εf	εfx =

i. அதிகமான நாட்கள் எந்த வீச்சினுள் காணப்பட்டன. (1 புள்ளி)

ii. ஒரு நாளில் தயாரிக்கப்பட்ட Bunகளின் இடைப் பெறுமானத்தை முழு எண்ணில் தருக. (5 புள்ளிகள்)

iii. ஒரு Bunஇன் உற்பத்திச் செலவு ரூ. 12 எனின் ஒரு நாளைக்கு உற்பத்திச் செலவிற்காக எவ்வளவு தொகையை முதலீடு செய்ய வேண்டும். (2 புள்ளிகள்)

iv. 1 மாத விற்பனையின்போது ரூ. 94050 வருமானமாக கிடைத்தால் அவர் ஒரு Bun இனை என்ன விலைக்கு விற்றிருப்பார். (2 புள்ளிகள்)

பகுதி B

07. இராணுவ பயிற்சி நிலையமொன்றில் வீரர்கள் உடற் பயிற்சிக்காக முதலாவது நிரையில் 12 பேரும் இரண்டாவது நிரையில் 19 பேரும், 3வது நிரையில் 26 பேரும் என்ற ஒழுங்கில் நின்றனர்

a) i. 6வது நிரையிலுள்ள வீரர்களின் எண்ணிக்கை யாது? (2 புள்ளிகள்)

ii. மொத்தமாக 15 நிரைகளில் வீரர்கள் காணப்படின் மொத்த வீரர்களின் எண்ணிக்கையைக் காண்க. (3 புள்ளிகள்)

iii. இன்னுமொரு படையணியைச் சேர்ந்த 243 வீரர்கள் அங்கு வந்தபோது "அவர்களை மேலும் இரு நிரைகளில் நிறுத்த இயலுமென இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார் எனின், இதனை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? காரணம் தருக. (3 புள்ளிகள்)

b) குறித்த பகுதியில் காணப்பட்ட எலிகள் 6 மாத இறுதியில் அதன் இரு மடங்காகின்றன. ஒரு இடத்தில் 4 எலிகள் காணப்படின் 2 வருட இறுதியில் அப்பகுதியில் எத்தனை எலிகள் காணப்படும். (2 புள்ளிகள்)

08. cm/mm அளவிடையுள்ள நேர் விளிம்பு, கவராயம் என்பவற்றை மாத்திரம் பயன்படுத்தி

i. $AB=8cm$ நீளமான கோட்டுத் துண்டம் ஒன்று அமைக்க. (1 புள்ளி)

ii. $A\hat{B}X=60^0$ ஆகுமாறு கோணம் ABX யை அமைக்க. (2 புள்ளிகள்)

iii. $AC=7.5m$ ஆகுமாறு புள்ளி C யை BX இல் குறிக்க. (2 புள்ளிகள்)

iv. கோடு AB இற்கு செங்குத்து இரு கூறாக்கி ஒன்றை அமைக்க அது AB யை வெட்டும் புள்ளியை Y எனக் குறிக்க.

v. AC இற்கு சமாந்தரமாக YZ யை அமைக்க இங்கு Z ஆனது BC இல் உள்ள ஒரு புள்ளி (2 புள்ளிகள்)

vi. ΔAZC இற்கு சம பரப்புள்ள முக்கோணி ஒன்றை பெயரிடுக. (1 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. உருவில் $AB = AC$ ஆகும். D இலிருந்து AB, AC இற்கு வரையப்பட்ட செங்குத்துகள் DE, DF ஆகும்.



i. வரிப்படத்தினை உமது விடைத்தாளில் பிரதி செய்து தரவுகளை குறிக்க. (2 புள்ளிகள்)

ii. BC இன் நடுப்புள்ளி D எனவும் (4 புள்ளிகள்)

iii. $A\hat{B}C + A\hat{C}B = E\hat{D}F$ எனவும் (2 புள்ளிகள்)

iv. $E\hat{D}F = 90^0$ எனின் $AEDF$ ஒரு சதுரமெனவும் காட்டுக. (2 புள்ளிகள்)

10. a) இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றின் போது ஒரு இல்லத்தின் குறித்த வயதுக்குட்பட்ட 43 மாணவர்களில் Ella, Cricket விளையாடக் கூடிய மாணவர்களின் விபரங்கள் வென்னுருவில் தரப்பட்டுள்ளது.



i. இரு விளையாட்டுக்களையும் விளையாடக் கூடியவர்கள் எத்தனை பேர் (1 புள்ளி)

ii. இவ்விரு விளையாட்டுக்களில் குறைந்தது ஒன்றையாவது விளையாடக்கூடியவர்கள் 28 பேர் எனின், Cricket மட்டும் விளையாடக் கூடியவர்கள் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

iii. இவ்விரண்டில் எதனையும் விளையாடாதவர்கள் எத்தனை பேர்? (1 புள்ளி)

b) $6a$ ஆரையுடைய உலோகத் திண்மம் தரப்பட்டுள்ளது. இதனை உருவில் $2a$ ஆரையை $3a$ உயரமுடைய திண்ம உருளைகள் உருவாக்கப்படுகின்றன.



i. அரைக் கோணத்தின் கனவளவைக் காண்க. (a இல் தருக.) (2 புள்ளிகள்)

ii. உருளை ஒன்றின் கனவளவு $12\pi a^3$ எனக் காட்டுக. (2 புள்ளிகள்)

iii. அரைக் கோணத்தின் மூலம் வீணாகாதவாறு எத்தனை உருளைகள் செய்ய முடியுமாக இருக்கும். (2 புள்ளிகள்)

தமிழ்... (26ஆம் பக்கத் தொடர்...)

உறவு முறை	தொழில்முறை
முகவரி : எம். அரீப், 71, பிரதான வீதி, சிலாபம். 13.05.02.	பெறுபவர் முகவரி : யாருக்கு, எந்த நிறுவனத்துக்கு அதன் முகவரி மட்டும்
விளிப்பு : அன்புள்ள தங்கை, அன்புடையீர், அருமை நண்பா, அன்பின்...	விளிப்பு : ஐயா, கனம், மதிப்புக்குரிய, அம்மணி...
முடிப்பு : உடன் அன்பான, அன்புள்ள, அன்புடன், ...	முடிப்பு : உண்மையுள்ள...
ஒப்பம் : பெயரை ஒப்பமிடலாம்.	ஒப்பம் : பெயரை ஒப்பமிடலாம்.

"கயிறு மிகவும் இறுக்கமானால் அது அறுந்துவிடும்" என்பது அரேபியப் பழமொழி. எனவே, வழிகள் உம்மை நெருக்கினால் அல்லது இறுக்கினால் விடியலை எதிர்பார். விரைவில் உன் வாழ்வில் நல்ல வழி பிறக்கும் என்பதை அறிந்துகொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 தர மாணவர்களுக்கு
விஞ்ஞானம்



ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

தரம் 10 இரசாயனவியல்

மூலகங்களின் இயல்புகளின் ஆவர்த்தனக் கோலங்கள்

- மூலகங்களை அணுவெண் அல்லது திணிவெண் ஏறுவரிசைப்படி ஒழுங்குபடுத்தி ஆராயும்போது அவற்றின் பல்வேறு இயல்புகள் குறித்த ஒழுங்கில் மாறுபட்டுச் செல்வதைக் காணலாம்.
- சம ஆயிடைகளிடையே குறித்த இயல்பு மீண்டும், மீண்டும் தோன்றுதல் ஆவர்த்தன இயல்பு எனப்படும்.
- மூலகங்களை ஆவர்த்தனமாகவும் கூட்டமாகவும் கொண்ட ஆவர்த்தன அட்டவணையை முதலில் அறிமுகப்படுத்தியவர் மெண்டலீவ் ஆவார். இவர் மூலகங்களை அணுத்திணிவு ஏறுவரிசைப்படி ஒழுங்குபடுத்தினார்.
- நவீன ஆவர்த்தன அட்டவணை அணுவெண் ஒழுங்கில் மூலகங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

ஆவர்த்தனமாக மாறும் மூலகங்களின் இயல்புகள்

1. **உருகுநிலை:** திண்ம நிலைப் பதார்த்தம் திரவ நிலைக்கு மாறும் வெப்பநிலை.
2. **கொதிநிலை:** திரவம் ஒன்றின் ஆவிய முக்கம் வளிமண்டல அமுக்கத்திற்குச் சமனாகும் வெப்பநிலை.
3. **அணுவாரை:** அணுவொன்றின் கருவிற்கும் இறுதிச் சக்தி மட்டத்திற்குமிடையிலான தூரம்.
4. **அணுக் கனவளவு:** மூலகம் ஒன்றின் மூலர்த் திணிவு பதார்த்தம் அடைக்கும் கனவளவின் கன சென்ரி மீற்றர் (cm^3) பெறுமானம்.

01. ஆவர்த்தனம் வழியே மூலகங்களின் உருகுநிலையும் கொதிநிலையும் எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதை விளக்குக.

- ஆவர்த்தனம் வழியே வலம் நோக்கிச் செல்ல மூலகங்களின் உருகுநிலை, கொதிநிலை என்பன பொதுவாக ivம் கூட்டம் வரை அதிகரித்துச் சென்று, பின் குறைந்து செல்கின்றது. எனவே, மிகக் கூடிய உருகுநிலை, கொதிநிலை கொண்ட கூட்டம் iv (C, Si) ஆகும். இவ்வாறே, மிகக் குறைந்த உருகுநிலை, கொதிநிலை கொண்ட கூட்டம் viii (He, Ne, Ar) ஆகும்.

02. அணுவாரை, அணுக் கனவளவு என்பன வெவ்வேறு கூட்ட மூலகங்களுக்கு எவ்வாறு வேறுபடுகின்றன?

- மூலகங்களின் அணுவாரை, அணுக் கனவளவு என்பன i ம் கூட்டத்திற்கு மிக உயர்வாகும். அடுத்ததாக viii ம் கூட்ட மூலகங்களுக்கு இது உயர்வாக இருக்கும்.
- அணுவாரை, அணுக் கனவளவு மிகக் குறைவாக இருக்கும் கூட்டம் iii (eg. B, AL) ஆகும்.

03. கீழே தரப்பட்ட அட்டவணை அணுவெண் ஒழுங்கில் அடுத்துவரும் இரண்டாம், மூன்றாம் ஆவர்த்தன மூலகங்களின் உருகுநிலைப் பெறுமானங்களைக் குறிக்கின்றன. இங்கு குறிப்பிடப்பட்ட எழுத்துகள் மூலகங்களின் உண்மைக் குறியீடுகள் அல்ல. இவற்றைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

மூகலம்	Q	R	S	T	U	V	W	X	Y
உருகு நிலை	2030	3600	-210	-218	-220	-249	97.8	601	660

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. இவற்றில் ஒரே கூட்டத்திற்குரிய மூலகங்கள் எவை?

ii. R எக்கூட்டத்தில் அடங்கும்? இதற்கான காரணம் யாது?

iii. தனித்தனி அணுக்களாகக் காணப்படும் மூலகம் எது?

iv. Tயும் Wஉம் சேர்ந்து உருவாகும் சேர்வையின் சூத்திரத்தை எழுதுக.

v. மேற்படி T, W இடையிலான சேர்வையின் பிணைப்பின் இயல்புகள் இரண்டை எழுதுக.

vi. +2 எனும் நேரயனை உருவாக்கும் மூலகம் எது?

vii. மூலகம் R ஆனது ஐதரசனுடன் (H) சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் சூத்திரத்தையும் இதன் பிணைப்பு வகையையும் எழுதுக.

விடைகள்

i. Q, Y ii. ivம் கூட்டம். ஏனெனில் ஆகக்கூடிய உருகு நிலையைக் கொண்டுள்ளது.

iii. V iv. W_2T

v. ● திரவ, கரைசல் நிலையில் மின்னைக் கடத்தும்.

● அறைவெப்பநிலையில் திண்மமாக காணப்படும்.

● உருகுநிலை, கொதிநிலை கூடியது.

vi. X vii. RH_4 பங்கீட்டு வலுப்பிணைப்பு

இரசாயன மாற்றங்கள்

இரசாயனச் சமன்பாடு, இரசாயனத் தாக்க வகைகள்

✶ அம்புக்குறியின் இடது புறத்தில் தாக்கிகளும் வலது புறத்தில் விளைவுகளும் குறித்துக் காட்டப்பட்டு எழுதப்படுவது இரசாயனச் சமன்பாடு ஆகும்.

✶ இரசாயனச் சமன்பாட்டில் தாக்கிகள், விளைவுகள் குறியீட்டைப் பயன்படுத்தி எழுதப்படுவதுடன் அவற்றின் பௌதிக நிலைகள் குறித்துக் காட்டப்படும்.

✶ சமன்பாட்டின் இரு புறமும் அணுக்களின் எண்ணிக்கை சமனாகக் காணப்பட வேண்டும்.

✶ இரசாயனத் தாக்கங்களைப் பிரதானமாக 4 வகைப்படுத்தலாம்:

1. இரசாயன சேர்க்கைத் தாக்கம்

$A + B \longrightarrow AB$

eg: $2Mg_{(s)} + O_{2(g)} \longrightarrow 2MgO_{(s)}$

2. இரசாயன பிரிகைத் தாக்கம்

$AB \longrightarrow A + B$

eg: $2KNO_{3(s)} \longrightarrow 2KNO_{2(s)} + O_{Xg}$

3. ஒற்றை இடப்பெயர்ச்சித் தாக்கம்

$A+BC \longrightarrow AC+B$

eg: $Mg_{(s)} + G_2SO_{4(og)} \longrightarrow MgSo_{4(og)} + H_{2(g)}$

4. இரட்டை இடப்பெயர்ச்சித் தாக்கம்

$AB + CD \longrightarrow AD + CB$

eg: $Na_2CO_{3(ag)} + CuSO_{4(ag)} \longrightarrow CuCO_{3(s)} + NaSO_{4(ag)}$

மின்கலங்கள்

1. எளிய மின்கலம் ஒன்றின் அமைப்பைப் பின்வரும் உரு காட்டுகின்றது:



i. இங்கு பொதுவாகப் பயன்படுத்தப்படும் மின்பகுபொருள் எது?

ii. இங்கு கரைசலில் காணப்படும் அயன்கள் எவை?

iii. மின்னோட்டம் எக்கோலிலிருந்து எக்கோலை நோக்கிப் பாயும் என்பதைக் குறிப்பிடுக.

iv. இங்கு செப்பு, நாகக் கோல்களில் நிகழும் தாக்கங்களுக்கான சமன்பாடுகளை எழுதுக.

v. எளிய மின்கலத்தில் ஏற்படக்கூடிய மின்னோட்டத்தின் அளவு படிப்படியாகக் குறைந்து செல்வதற்குக் காரணமான 2 நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi. இம் மின்கலத்தின் தொழிற்பாட்டிற்கு செப்பு சல்பேற்றும் பயன்படுத்தப்பட்டதாயின் அதற்குக் காரணம் யாதாக இருக்கலாம்?

vii. உலர் மின்கலங்களில் பின்வரும் தொழிற் பாடுகளுக்காகப் பயன்படும் பொருட் களை எழுதுக.

a. நேர்முனைவு b. மறைமுனைவு

c. மின் பகு பொருள் d. முனைவழி பொருள்

விடைகள்

i. ஐதான சல்பூரிக்கமிலம் (H_2SO_4)

ii. H^+, OH^-, SO_4^{2-}

iii. செப்பிலிருந்து நாகத்தை நோக்கி

iv. செப்பு: $2H^+ + 2e \longrightarrow H_{2(g)} \uparrow$

நாகம்: $Zn \longrightarrow Zn^{2x} + x$

v. 1. முனைவாக்கம் ஏற்படல்.

2. இடத்தாக்கம் ஏற்படல்.

vi. முனைவழி பொருளாகப் பயன்படும்/ இலத்திரன் களை ஏற்கப் பயன்படும்.

vii. a. காபன் கோல் b. நாகப் பாத்திரம்

c. அமோனியம் குளோரைட்டுப் பசை

d. மங்கனீசு ஈரெட்சைட்டு MnO_2

தரம் II இரசாயனக் கைத்தொழில் (Industrial Chemistry)

01. சீமெந்து உற்பத்திச் செயன்முறை தொடர்பான குற்றி வரிப்படம் கீழே காட்டப்பட்டுள்ளது. இங்கு ஆங்கில எழுத்துக்கள் குறித்து நிற்கும் சொற்கள் ஒழுங்கின்றி அடைப்பினுள் தரப் பட்டுள்ளன.

(குளிர்த்தல், சுழலும் சூளையில் 1400-1600°C இல் எரித்தல், ஜிப்சம் சேர்த்தல், சுண்ணக்கல், களிமண்)

P,Q $\xrightarrow{T}$ கிளிங்கர் $\xrightarrow[S]{R}$ சீமெந்து

i. P,Q,R,S,T குறிக்கும் சொற்களை அடைப்பி லிருந்து தெரிந்து பொருத்தமாக எழுதுக.

ii. கிளிங்கரில் காணப்படும் இரசாயனச் சேர் வைகள் இரண்டை எழுதுக.

iii. சீமெந்து தயாரிப்பில் ஜிப்சம் சேர்க்கப்படு வதன் நோக்கம் யாது?

vi. சீமெந்து தயாரித்தலுக்கு சுண்ணாம்புக் கல் லும் களிமண்ணும் எவ்விகிதத்தில் சேர்க்கப் படும்?

v. சுண்ணாம்புக் கல் பயன்படும் இன்னொரு கைத்தொழிலாக நீறாத சுண்ணாம்பு உற்பத் தியைக் குறிப்பிடலாம். இலங்யையில் மரபு ரீதியான சுண்ணாம்புச் சூளைகளில் காணப் படும் பிரதிகூலங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

உப்புக் கைத்தொழில்

✶ இலங்கையில் கறியுப்பு கடல் நீரை ஆவியாக் குவதன் மூலம் உப்பளங்களில் பெறப்படு கின்றது.

✶ உப்பளங்களில் உள்ள மூன்று வகையான பாத்திகளில் வெவ்வேறு பதார்த்தங்கள் வீழ் படிவாகின்றன.

i. பெரிய ஆழமற்ற 1ம் வகை பாத்திகள்

▶ கடல் நீர் அதிகளவில் ஆவியாகும்.

▶ நீரின் செறிவு ஆரம்பச் செறிவின் 2 மடங் காகும்போது இரும்பு ஒட்சைட்டு, கல்சி யம் காபனேற்று வீழ்படிவாகும்.

ii. நடுத்தர அளவுள்ள 2ம் வகைப் பாத்திகள்

▶ நீரின் செறிவு ஆரம்பச் செறிவின் 4 மடங்காக வரும்போது அதிலுள்ள கல்சியம் சல்பேற்று (ஜிப்சம்) வீழ்படிவாகும்.

iii. சிறிய 3ம் வகைப் பாத்திகள்

▶ நீரின் செறிவு ஆரம்பச் செறிவின் 10 மடங்கு வரை அதிகரிக்கும்போது அதிலுள்ள சோடி யம் குளோரைட்டு வீழ்படிவாகும். செறிவு மேலும் அதிகரிக்க மக்னீசியம் குளோரைட்டு வீழ்படிவாகத் தொடங்கும்.

✶ கறியுப்பில் ஜிப்சம், மக்னீசியம் குளோரைட்டு என்பன மாசாகக் காணப்படும். இதனால் உப்பு நீர் கசியும், கசப்புச் சுவை கொண்டதாக இருக்கும்.

✶ கறியுப்புடன் பொற்றாசியம் அயடேற்று சேர்க்கப்பட்டு அயடீன் கலந்த உப்பு உருவாக் கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சாரல்

என் தந்தை

காலமெல்லாம் கண்ணியமாக வாழ
களைப்பின்றி உழைப்பவர்
தக்கபடி வழிநடத்தி
தகைமைகள் வளர்ப்பவர்
இறைவன் தந்த வரம் என் தந்தை!

வான் மறையையும்
வழிமுறையையும் - வழுவின்றி
அறியத் தந்தவர்!
கானல் நீர் போன்று
கவலையில் இன்பமாக
குதித்திட கற்றுத்தருபவர்!

அன்பு, பண்பு அறங்களுடன்
அறிவும் பல படித்துத் தருபவர்
களைப்படைந்த உணர்வுகளை
திடப்படுத்தித் தருபவர் அவரே
என் தந்தை
நலமாக வாழத் துதிக்கிறேன்

நஸ்ரின்

எறும்பும் மனிதனும்

ஏ.ஏ.எம். அஸ்கர்



உன்னின் மகிமை என்னவென்று
நான் அறிவேன் - உலகில்
அற்பப் பிராணியும் நீயே!
அற்புதப் பிராணியும் நீயே!

உடலில் மனிதனின் பருமனை விட
எளியவனாய் இருக்கின்றாய்
சுறுசுறுப்பற்ற மனிதனுக்கு
உதாரணமாக நீ திகழ்கின்றாய்

எளிதாயிருந்து நீ உன் விஷயத்தைப்
பயிற்றுவிக்கும் விதம்
என்னை ஆச்சரியப்படுத்துகிறது
காரணம் நீ அதிசயப் படைப்பு

உள்ளமே...

அழுக்குகளை அகற்றி விடு
அலங்காரங்களைப் புகுத்தி விடு
கவலைகளைக் களைந்து விடு
அமைதிகளை அணிந்து விடு

கலக்கங்களைக் கொன்று விடு
தெளிவுகளை மென்று விடு
மென்மைகளைச் சேர்த்து விடு
வன்மைகளைப் பிரித்து விடு

துணிவுகளை எடுத்து விடு
நடுக்கங்களைத் துரத்தி விடு
தன்னம்பிக்கையை வளர்த்து விடு
தற்பெருமையைப் பறக்க விடு

நல்லுபதேசங்களைக் கேட்டு விடு
சுடு சொற்களை மறந்து விடு
மெய்யுரைகளை மதித்துவிடு
பொய்யுரைகளை மிதித்து விடு

இலட்சியத்தை உயர்த்தி விடு
அலட்சியத்தை வீழ்த்தி விடு
நெஞ்சகத்தை விரித்து விடு
வஞ்சகத்தை ஒழித்து விடு

கருமைகளைக் கழுவி விடு
வெண்மைகளை உறையவிடு
இறைவனையே நம்பிவிடு
உத்தமனாய் வாழ்ந்து விடு

முஹம்மட் அன்வர் ஜினானி
அத்தைபா மகளிர் அ.க.
சாய்ந்தமருது

மாணவர் விடுதியில் இருந்து பார்

தனிமையின் வரைவிலக்கணம் தெரியும்
நண்பர்களை குடும்பமாக்கிக்
கொள்வாய்!
நாளைய பொழுதின் அர்த்தம்
புரியும்!
சவர்க்காரம், சலவைத்தூள்
விலையறிந்திருப்பாய்
பணத்தைப் பக்குவமாய்க் கையாளுவாய்
ஆகாரம் மூன்று முறை தான்
உனது விழிகளுக்குள் காட்சியளிக்கும்
அப்போது ஓர் உணர்வு பிறக்கும்

பொறுமையின் ஆழம் புரியும்
சில நேரம் கல்வி வெறுக்கும்

பின் கல்விதான் நிலையானது
என உனக்குள்ளே, பதிலளிப்பாய்
வாழ்க்கைக்கு ஓர் ஒத்திகையாக
இருக்கும்...
மாணவர் விடுதியில் இருந்து பார்...

பாத்திமா மனால் மஹ்றூப்
தி/ ஸாஹிரா கல்லூரி
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்.வை.எப். சியாமா, மாவனல்லை

வாழ்வில் வெற்றி பெற...

1. சுறுசுறுப்பு

கல்வி கற்கும் மாணவர்கள் மத்தியில் காணப் பட வேண்டிய ஒரு சிறந்த பண்பே சுறுசுறுப்பாகும். இன்று பலர் தமது வேலைகளை செய்வதற்கே சோம்பிக் கிடக்கின்றார்கள். அதனைப் பற்றி பிரான்ஸிய பழமொழி ஒன்று பின்வருமாறு கூறுகிறது:

"சோம்பேறி ஊர்ந்து செல்லும்போது வறுமை அவன் முகத்தில் அமர்ந்து கொள்கிறது."

நாம் வாழ்வில் உயர்ந்த இடத்தை அடைய வேண்டுமானால், சுறுசுறுப்புடன் செயலாற்ற வேண்டும். இப்பண்பு மாணவர்கள் மத்தியில் காணப்படாவிட்டால், உங்களது கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படும். அதனால் வாழ்வின் வெற்றிப் படிகளை தாண்ட முடியாமல் போகும். நீங்களும் விண்ணைத் தொட வேண்டுமானால் விடியற் காலையிலேயே சுறுசுறுப்பாக எழுந்திடுங்கள். உமது வேலைகள் அனைத்தையும் நீங்களே செய்திடுங்கள். குறிப்பிட்ட நேரங்களை குறிப்பிட்ட விடயங்களுக்காகப் பயன்படுத்துங்கள்.

"நாளைக்கு என்று எதையும் பிற்போடாதே. இன்று செய்ய முடியுமானதை இன்றே செய்."

2. தன்னடக்கம்

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு (திருக்குறள்)

மேற்கூறப்பட்ட திருக்குறள், உலக செல்வங்கள் அதிகரிக்க, அதிகரிக்க நாம் பணிவாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் அது போல் எமது வாழ்வில் சிறு கஷ்டமோ, துன்பமோ ஏற்படும் போது எவருக்கும் அடிபணியாது தைரியமாக வாழும் துணிவு வேண்டும் என்றும் விளக்குகிறது. அதனடிப்படையில் எம்மிடம் கட்டாயமாக தன்னடக்கம் காணப்பட வேண்டும். பெருமைக் குணம் ஒருபோதும் எம்முள் குடிகொள்ளக் கூடாது. அதாவது, நாம் வாழ்வில் முன்னேற வேண்டும் என்று நினைத்தால் பல தடைகளைத் தாண்ட வேண்டும். சில தடைகளைத் தாண்டி ஓரளவு வெற்றி அடைந்தால், சிலருக்கு தாம் அனைத்தையுமே சாதித்து விட்டதாக கர்வம் ஏற்படும். ஆனால், அந்த கர்வமே மீண்டும் வெற்றிப் படிகளிலிருந்து இறக்கி வைத்துவிடும்.

வாழ்வில் நாம் எந்தளவு உயர்ந்த இடத்தை அடைந்தாலும் அகம்பாவமோ, ஆணவமோ, கர்வமோ கொள்ளக் கூடாது. நாம் பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> வெற்றிகள் அனைத்தும் இறைவனையே சாரும் என்ற ஆழமான விசுவாசத்தை எமது உள்ளங்களில் இருத்த வேண்டும்.

வெற்றிகள் அனைத்தும் இறைவனையே சாரும் என்ற ஆழமான விசுவாசத்தை எமது உள்ளங்களில் இருத்த வேண்டும். உலக செல்வங்களோ, கல்வியின் மூலம் நாம் பெறும் வெற்றிகளோ எம்மை அகம்பாவத்திற்கு இட்டுச் சென்று எம்மை அறியாமலேயே நாம் கீழ்த்தரமான இடத்திற்குக் கொண்டு சென்றுவிடக் கூடாது. மாறாக, என்றும் மனிதப் பண்புகளுடன் வாழ்வதற்கு சிறுவயதில் இருந்தே நாம் கற்றுக் கொள்ள வேண்டும். சில மாணவர்கள் தாம் கல்வி கற்று உயர்நிலையை அடைந்தால் தன்னைவிட முதியவர்களையும் மதிக்க மறந்து விடுவார்கள்.

"என்றும், நீ நீயாக இரு" என்பது ஒரு முதுமொழியாகும். இதற்கிணங்க மாணவர்களாகிய நாம் சிறுவயதில் இருந்தே பணிவையும் தன்னடக்கத்தையும் நமது அணிகலன்களாக அணிந்து கொள்ள வேண்டும். என்றுமே சிறியோருடன் அன்பாகவும் முதியோருடன் பண்பாகவும் நடந்து கொள்ள வேண்டும். தன்னைப் பற்றி வீணாக பெருமை அடித்துத் திரிபவனைப் பற்றி நெதர்லாந்துப் பழமொழி ஒன்று பின்வருமாறு விளக்குகிறது:

"தன்னைத்தானே புகழ்ந்து கொள்பவன் ஒரு முட்டாள்.தன்னைத்தானே இகழ்ந்து கொள்பவன் ஒரு பைத்தியக்காரன்."

3. நேர்வகையாக சிந்தித்தல்

கல்வி கற்கும் மாணவர்களது உள்ளம் எப்போதும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். உள்ளம் ஆரோக்கியமாக இருந்தாலேயே அவர்களால் சிறப்பாகக கற்க முடியும். இன்று சில மாணவர்கள் எதையுமே எதிர்மறையாக நினைப்பார்கள். எதிர்மறை சிந்தனையானது எம்மை ஆழமான தோல்விப் பாதையில் இட்டுச் செல்லும். சில மாணவர்கள் என்னால் படிக்க முடியவில்லையே, என்னால் வகுப்பில் முதலாம் இடத்திற்கு வர முடியவில்லையே, நான் பரீட்சையில் சித்தி அடைவேனா? என்றெல்லாம் பிழையாகவே சிந்திக்கிறார்கள்.

நாம் எதை எண்ணுகிறோமோ அதுவே எமக்கு நிகழும். உளவியலும் இதனையே வலியுறுத்துகிறது. எனவே, நாம் சிந்திப்பவை அனைத்தையுமே நல்லதாகவே சிந்திக்க வேண்டும். எதுவுமே தன்னால் முடியும் என்றும் ஏனையோருக்கு முடியுமானால் ஏன் எனக்கு முடியாது என்றும் சிந்தியுங்கள். நிச்சயமாக இறைவன் ஆறறிவு படைத்த மனிதர்கள் அனைவரையும் ஏதோ ஒரு வகையில் சமமாகவே படைத்துள்ளான். நல்லதே நினைப்போம், நல்லதே நடக்கும்.

4. சுயமாக முடிவெடுத்தல்

இன்று எமது மாணவர்கள் மத்தியில் கண்டு கொள்ளக் கடினமான ஓர் அம்சமே சுயமாக முடிவெடுத்தல் ஆகும். மாணவர்கள் தமது பெற்றோரினதும் முதியவர்களினதும் அறிவுரைகளை கேட்டு நடப்பது அத்தியவசியமாகும். அவ் வழிகாட்டலுக்கேற்ப மாணவர்களே சுயமாக முடிவெடுப்பது அவர்களது வெற்றிக்கு வழி வகுக்கும்.

"ஏனையோரிடம் அறிவுரைகளைக் கேள்; ஆனால் முடிவை நீயே எடு."

இன்று சில மாணவர்கள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிந்து உயர்தரத்தில் காலடி வைக்கும்போது சில பெற்றோர் நீ இந்த துறையைத்தான் தெரிவு செய்ய வேண்டும், இந்த பாடத்தைத்தான் கற்க வேண்டும் என்று வற்புறுத்துவார்கள். ஆனால், உண்மையிலேயே பெற்றோர் இவ்வாறு பிள்ளைகளை வற்புறுத்தக் கூடாது. பிள்ளைகளுக்கென்று சில விருப்பு, வெறுப்புகள் இருக்கலாம். எனவே, அவற்றுக்கு பெற்றோரும் இடமளிக்க வேண்டும்.

நாம் ஆசை கொள்ளும் ஒரு விடயத்தைத்தான் எம்மாலும் சிறப்பாக மேற்கொள்ள முடியுமாக இருக்கும். எனவே, நாம் கட்டாயமாக பெற்றோரிடமும் முதியோரிடமும் ஆசிரியர்களிடமும் ஆலோசனை கேட்க வேண்டும். அவற்றை அடிப்படையாக வைத்து நாமே சுயமாக சிந்தித்து முடிவெடுத்தல் எமது வெற்றிக்கு வழிகோலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 45 நிமிடம்

வினாப்பத்திரம் I

ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

அடைப்புக்குள் உள்ள சரியான சொற்களுக்குக் கோடிடுக.

1. (அலை, அளை)க்குள் வாழ்ந்த எலி (வளை, வலை)க்குள் சிக்கியது.
2. (மலை, மழை) மேகங்கள் (மலை, மழை)யில் முட்டின.
3. (பணி, பனி)யில் ஈடுபட்டிருந்த கிழவர் (பனி, பணி)யால் அவதியுற்றார்.
4. (இறை, இரை) பக்தி கொண்ட கமலா (இரை, இறை)யை மறந்தவளாக வழிபாட்டில் ஈடுபட்டாள்.
5. (விளை, விலை) பொருட்களின் (விளை, விலை) ஏற்றத்தால் மக்கள் அவதியுற்றனர்.

பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான சரியான விடைக்குக் கோடிடுக.

6. உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு

7.  விரைவு, சோகம், தாமதம்

8. உத்தமர், மத்திமர், அதர்மர்

9.  நட்சத்திரம், அம்புலி, கதிரவன்

10. கலகல, கடகட, மடமட

பின்வரும் சொற்களுக்கு ஆண், பெண் மரபுகளை எழுதுக.

	ஆண்	பெண்
பூனை	11.	12. ....
நரி	13.	14. ....
மான்	15.	16. ....

படத்திற்குப் பொருத்தமான சொற்தொகுதியின் கீழ் கீறிடுக.

17.
i. பெண், அழகு, குளிர்
ii. பெண், பாடசாலை, மழை
iii. மழை, வெயில், பாதுகாப்பு

18.
i. எரிபொருள், பயணம், வேகம்
ii. பாதை, வேகம், வீடு
iii. பயணம், பாதை, கடல்

19. 
i. மாணவர், ஆசிரியர், விவசாயி
ii. அதிபர், மாணவர்கள், ஆசிரியர்
iii. கரும்பலகை, புத்தகம், வீடு

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

20. ஈரலிப்பான தோலைக் கொண்ட பிராணி.
i. பாம்பு ii. உடும்பு iii. தவளை

21. காபோவைதரேற்று அதிகமாக உள்ள உணவுத் தொகுதி
i. மரவள்ளிக் கிழங்கு, சவ்வரிசி, உருளைக் கிழங்கு
ii. கருவாடு, முட்டை, சோயா
iii. பழம், நெய், தேங்காய்

22. வண்ணத்துப் பூச்சி எந்த உறுப்பினால் சுவையை அறிகிறது.
i. வாய் ii. கண் iii. கால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. தக்காளிச் செடியைத் தாக்கும் உயிரினம் எது?

i. மண்புழு ii. எறும்பு
iii. துளைப்பான்

ஒவ்வொரு தொகுதியின் கட்டங்களிலுமுள்ள எண்களை அவதானித்து மூன்றாவது தொகுதியின் இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை தெரிவு செய்க.

24.

4	5	16	7	5	28	8	6	?
5	4	25	6	4	30	4	7	24

i. 18 ii. 24 iii. 56

25.

9	8	15	6	3	11	6	4	?
5	6	13	7	5	10	8	9	12

i. 15 ii. 18 iii. 24

26.





A சதுரம் போன்று எத்தனை துண்டுகள் வெட்டலாம்?

i. 18 ii. 16 iii. 10

27. கீழ்வரும் கணிதச் செய்கைக்கு கூண்டுக்குள் வர வேண்டிய கணிதக் குறியீட்டைத் தெரிந்து கோடிடுக.

6 ☐ 6 ☐ 6 ☐ 6 ☐ 6 = 6

i. -, +, -, + ii. +, +, -, -
iii. -, x, +, x

மிகச் சரியான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.

(கோபம், நாணம், மகிழ்ச்சி, துக்கம், வெறுப்பு)

28. மங்கை .... கொண்டு தலை குனிந்து நடந்து சென்றாள்.

29. குமரன் தன் நாட்டின் மீது ....ற்று வேறு நகர் சென்றான்.

30. தந்தை .... தாங்காது விக்கி விக்கி அழுதார்.

31. அரசன் .... கொண்டு பற்களை நற நற வென கடித்தான்.

32. மாணவர்கள் .... பொங்க ஆரவாரம் செய்தனர்.

பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

மெல்ல மெல்லப் பாய்ந்து வரும்
புல் வெளியில் மேய்ந்து வரும்
காண்பவரை கவர்ந்திழுக்கும்
கண் இரண்டும் சிவந்திருக்கும்

33. இப்பாடலில் குறிப்பிடப்பட்டிருப்பது.

i. குடிகாரன் ii. புலி iii. முயல்

34. மெல்ல மெல்ல என்பது

i. இணை மொழி
ii. அடுக்குத் தொடர்
iii. இரட்டை கிளவி

35. புல் என்பதன் பன்மை

i. புட்கள் ii. புற்கள்
iii. புறக்கள்

36. பாடலில் இடம் பெற்ற வினையெச்சம்

i. வெளியில் ii. மேய்ந்து
iii. இரண்டும்

37. கவர்ந்திழுக்கும் என்பதை பிரித்து எழுதினால்

i. கவர்ந்தி + இழுக்கும்
ii. கவர்ந்து + இழுக்கும்
iii. கவர்ந்து + திழுக்கும்

பின்வரும் கோடிட்ட சொற்களுக்கு பொருத்தமான விடைக்குக் கோடிடுக.

38. மல்யுத்த வீரன் மேடையில் நின்று கொண்டு அறைகூவல் விட்டான்.

i. சண்டை இட்டான்
ii. உரை நிகழ்த்தினான்
iii. போருக்கு அழைத்தான்

39. துறைமுகத்தில் வெள்ளோட்டம் ஒன்று நிகழ்ந்தது.

i. சுனாமி ஏற்பட்டது.
ii. முதன் முதலாக கப்பலை ஓட்டிப் பார்த்தார்கள்.
iii. வெள்ளம் ஏற்பட்டது.

முதற் சொல்லுக்குப் பொருத்தமான இன்னுமொரு சொல்லிற்கு கோடிடுக.

40. மலிவு (ஒறுப்பு, இலாபம், விளைச்சல்)

41. மா (சோறு, சுளை சதை)

42. புகையிலை (சிவப்பு, கட்டு, குவியல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. 23:52h எனும் நேரத்தைக் காட்டும் நியமக் கடிகாரம் இன்னும் 8 நிமிடங்களின் பின்னர் காட்டும் நேரம் என்ன?

i. 0.0.00 S ii. 12:00 h
iii. 00:00 h

44. மூன்று எண்களைக் கூட்டும் போது 131 வரக்கூடிய எண்தொகுதி

i. 76, 48, 17 ii. 68, 32, 21
iii. 19, 37, 75

45. மூன்று எண்களைக் கூட்டும்போது ஒரு சதுர எண் வரும். அவ்வெண் தொகுதி யாது?

i. 13, 27, 19 ii. 28, 20, 16
iii. 18, 20, 16

46. ஒரு குவியலில் 253 மாம்பழங்கள் உள்ளன. இதில் 69 பழுதடைந்து விட்டன. மீதியாக உள்ளதில் 1/2 பங்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு மாம்பழம் 7.50 சதத்துக்கு விற்பனை செய்யப்பட்டால் மாம்பழங்களின் மொத்த விலை

i. ரூபா 1035.00 ii. ரூபா 1025.00
iii. ரூபா 1135.00

47. ஒரு குதிரைக்கு நான்கு கால்கள் எனின் 10 குதிரைக் குட்டிகளுக்கும் 12 குதிரைக்கும் எத்தனை கால்கள்?

i. 84 ii. 88 iii. 80

48. 9099, 9199, 9909, 9999

தரப்பட்ட எண்களை இறங்கு வரிசைப்படி எழுதினால் வருவது.

i. 9999, 9199, 9099, 9909

ii. 9099, 9199, 9909, 9999

iii. 9199, 9999, 9099, 9909

49. 3m நீளமான கம்பியை நான்கு சம அளவாக வெட்டினால் ஒரு கம்பித்துண்டின் நிளம்

i. 75m ii. 75mm iii. 75cm

புலமைப்பரிசில்... (44ஆம் பக்கத் தொடர்....)

45. SLS என்ற ஆங்கில எழுத்து பொருட்களில் பொறிக்கப்படுவது.

i. வெளிநாட்டு பொருள் என்பதற்கு

ii. இலங்கையின் தரம் நியமம் கொண்டது என்பதற்கு

iii. நுகர்வுக்கு பொருத்தமான பொருள் என்பதற்கு

வாக்கியங்களை ஒழுங்கமைக்குக.

46. ஏமாந்து, மக்கள், எதிர்பார்த்து, போனார்கள், மழையை, இம்முறை

....

47. குருவி, பறந்தாலும் உயர, பருந்தாகுமா, உயரப், ஊர்க்

....

சரி, பிழை கூறுக.

48. கியுலெக்ஸ் நுளம்பினால் வாந்திபேதி ஏற்படும். ( )

49. வேளாண்மை என்பது கடலில் செய்வதாகும். ( )

50. நீரின் திண்ம நிலை ஐஸ் கட்டியாகும். ( )

51. ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சி செய்தனர். ( )

52. இயல், இசை, நாடகம் என்பது முத்தமி. ( )

53. பின்வரும் படங்களை ஆதாரமாக வைத்து "நான் ஆசையோடு நாட்டிய ரோஜாச் செடி" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழு துக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற் களையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.

i. 
ii.
iii.

தவறுக்கு வருந்துகிறோம்

சென்ற இதழில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பகுதியில் வினா 44இனதும் 45இனதும் படங்கள் மாறிவந்துள்ளன. அதனை இவ்வாறு திருத்திக் கொள்ளவும்.

44. இப்படத்தில் காட்டப்படுவது.

i. குப்பைவாரியினால் குப்பை புரட்டுதல்.
ii. முன்னால் மனிதன் வேலை செய்கின்றான்.
iii. தடியைப் பாவித்து கல்லொன்றைபுரட்டுதல்.

45. இவ்வுபகரணத்தைப் பயன்படுத்துவது.

i. மேசன் தொழில்
ii. தச்சன் தொழில்
iii. விவசாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II

ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

க. கமலநேசன்,
இலக்கம் – 18,
பிரதான வீதி,
வவுனியா.

1..............................

அன்பு மருமகள்,

நான் நலம். நாடுவதும் அதுவே. உனது மடல் கண்டேன். மிக மகிழ்ச்சி. நீ உனது பாடசாலையில் கல்விச் சுற்றுலா செல்ல வேண்டும் என எழுதி இருந்தாய். அதற்காக இரண்டாயிரம் ரூபாய் பணம் அனுப்பும்படி கேட்டிருந்தாய். நான் இப்போது உனது அப்பாவிடம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் அனுப்புகிறேன். மீதி ஐநூறு ரூபாயை உனது அப்பாவிடம் பெற்றுக் கொள்.

நன்றி.

இவ்வண்ணம்
அன்பு 2...............
க. கமலநேசன்

1. இக்கடிதம் யாரால் யாருக்கு அனுப்பப்பட்டது?
2. இக்கடிதம் எழுதியதற்கான நோக்கம் யாது?
3. பணம் அனுப்பியவர் யார்?
4. சுற்றுலாவிற்கு வேண்டப்பட்ட பணம் எவ்வளவு?
5. ஆயிரத்து ஐநூறு ரூபாய் அல்லாமல் மீதி பணத்தை யாரிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு கூறப்பட்டது.
6. இக்கடிதத்தில் இடம்பெற்ற பாத்திரங்கள் யாவை?
7. கடிதம் என்பதற்கு கடிதத்தில் பாவிக்கப்பட்ட சொல் எது?
8. அப்தா என்பதற்கான இரு ஒத்த பதங்களைக் குறிப்பிடுக.
9. இக்கடிதத்தை பதிவுத் தபாலில் அனுப்புவதென்றால் எவ்வளவு பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும்?
10. கடிதத்தில் 1, 2 எனக் குறிப்பிடப்பட்ட இடத்தில் பொருத்தமான விடைகளை எழுதுக.

சரியான படத்தின் கீழ் கோடிடுக.

11.



i.



ii.



iii.

12.



i.



ii.

iii.

13.



i.



ii.



iii.

பின்வரும் சிங்கள வாக்கியங்களுக்கான கருத்தை எழுதுக.

14. அலுத் பொத்த :..............................

15. லொகு மாலு :..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

16. Big Star :................................

17. Nine Rabits :................................

18. இங்கு அடுக்கி வைக்கப்பட்டுள்ள செங்கற்கள் எத்தனை?



i. 7

ii. 6

iii. 5

19. சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்பன மொழிகள் என காட்டும் சரியான வென் வரைபு எது?



20. அருகில் உள்ள உருவில் உள்ள உச்சிகள், விளிம்புகள், முகங்கள் என்பவற்றை முறையே காட்டும் சரியான விடை.



i. 6, 8, 12 ii. 12, 6, 8

iii. 8, 12, 6

முதலில் தரப்பட்டுள்ள உருவில் உள்ளவை போன்று அமைந்துள்ள உருவின் கீழ் கீறிடுக.

21.

X	Z
U	V
L	E

i.

X	V
U	Z
W	L

ii.

X	Y
L	Z
U	V

iii.

E	X
V	L
Z	U

22.

ட	ம	ப
ல	க	ச
த	ய	

i.

சா	ட	
த	ம	கா
க	ய	

ii.

ச	ம	ப
த	ய	
ட	ம	ள

iii.

ய	க	ச
த	ல	
ட	ப	ம

23. தென் மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேசங்கள் உள்ள தொகுதியை கண்டுபிடித்து அதன் கீழ் கீறிடுக.

i. காலி, மாத்தளை, அம்பாந்தோட்டை

ii. மாத்தறை, அம்பாந்தோட்டை, காலி

iii. காலி, கொழும்பு, அம்பாந்தோட்டை

24. புரத உணவு அதிகமாக உள்ள உணவுத் தொகுதி.

i. மரவள்ளி, உருளைக் கிழங்கு, சவ்வரிசி

ii. பழங்கள், நெய், பால்

iii. கருவாடு, இறைச்சி, சோயா

25.



இவ்வுருவின் சுற்றளவு ....

26. இச் சதுர வடிவத்தினுள் இவ்வாறான ஒரே அளவுடைய வட்டத்தினால் முழுமையாக நிரப்புவதற்கு மொத்தமாக எத்தனை வட்டங்கள் தேவைப்படும்?



27. பென்சில் ஒன்றின் நீளத்தை அளப்பதற்குப் பொருத்தமானது.

i. மீற்றர் ii. சென்றி மீற்றர்

iii. கிலோ மீற்றர்

28. காணி ஒன்றின் நீளம், அகலம் என்பவற்றை அளப்பதற்கு மிகவும் பொருத்தமானது.

i. கிலோ மீற்றர் ii. சென்றி மீற்றர்

iii. மீற்றர்

29. பின்வரும் பிராணிகளின் கால்களின் எண்ணிக்கையில் கூடுதலாக அமையும் கூட்டம் எது?

i. மாடுகள் 7, மயில்கள் 6, கிளிகள் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii முயல்கள் 5, கிளிகள் 12, புலிகள் 3

iii. கோழிகள் 14, யானைகள் 4, குயில்கள் 6

30. மார்ச் 2ம் திகதி திங்கட்கிழமையாயின் அம் மாதத்தில் உள்ள புதன்கிழமைகள் எத்தனை?

i. 3 ii. 4 iii. 5

31. பின்வரும் எண்கோலத்தில் A என்ற இடத்தில் வர வேண்டிய எண் எது?



32. '?' எனும் இடத்திற்கு வர வேண்டிய பெறுமானம் யாது?



i. 28 ii. 18 iii. 32

பின்வரும் பெரியார்களின் பெயர்களை எழுதுக.

33. ....

34. ....

35. ....

36. ....

37. முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யாத ஒரு பிராணி.

i. ஆமை ii. முயல்

iii. பல்லி

38. இலங்கை தபால் திணைக்களங்களின் இலச்சினையில் உள்ளது?

i. மயில் ii. தபால் பெட்டி

iii. புறா

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

39. பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் அஞ்சல் ஓட்டப் போட்டியில் ஒரு குழுவில் எத்தனை பேர் கலந்து கொள்வர்?

i. நான்கு பேர் ii. மூன்று பேர்

iii. ஐந்து பேர்

40. கடவுச் சீட்டை பெற்றுக் கொள்ளச் செல்ல வேண்டிய இடம்.

i. ஆட்பதிவுத் திணைக்களம்

ii. குடிவரவு குடியகழ்வுத் திணைக்களம்

iii. பிரதேச சபை

41. விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது மழையுடன் மின்னலும் திடீரென ஏற்படும் வேளையில் பாதுகாப்பிற்காக நாம் பின்பற்ற வேண்டிய சரியான நடவடிக்கை எது?

i. ஓடிச் சென்று மரத்தடியில் நிற்றல்.

ii. உடனடியாக நிலத்தில் படுத்தல்.

iii. மைதானத்தில் கூட்டமாக இருத்தல்.

42. போக்குவரத்துக் குறியீடு குறிப்பது.

i. இடது பக்கம் திரும்பவும்

ii. இடது பக்க வளைவு

iii. வாகனங்கள் செல்லத் தடை

43. பின்வரும் நான்கு அடைப்புக்களில் ஒன்றில் தரப்பட்டுள்ள மாதங்கள் வேறுபடுகின்றன. அதைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

i. ஜனவரி, பெப்ரவரி, ஏப்ரல்

ii. டிசம்பர், ஏப்ரல், மே

iii. மார்ச், மே, ஜூன்

iv. ஜூலை, ஆகஸ்ட், ஒக்டோபர்

44. சீனி கரைந்த நீரிலே எலுமிச்சம் பழத்தை பிழிந்து விடும்போது அதன் விதைகள்

i. நீர் கரைசலில் அடியில் காணப்படும்.

ii. நீர் கரைசலில் மிதக்கும்.

iii. நீர் கரைசலில் நடுவில் காணப்படும்.

(41ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

中文 | Español | Français

THINK•EAT•SAVE
REDUCE YOUR FOODPRINT

REGISTER YOUR ACTIVITY FOR WORLD ENVIRONMENT DAY

ZERO HUNGER CHALLENGE

save FOOD

Home | About | Take Action | Be Informed | Partners | Media | Contact Us

ஐக்கிய இராச்சியத்தில் 6.7 மில்லியன் தொன் உணவு வருடா வருடம் விரயமாக்கப்படுவதுடன் 32% உணவு உண்ணப்படுவதில்லை. சிறந்த முகாமைத்துவம் மூலம் உண்ணப்படாத பகுதியையும் உண்ணப் பயன்படுத்தலாம்.

THINK

EAT

SAVE

Food for Thought

Seasonal Figs

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினது உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் (FAO) கணிப்பீட்டின் படி 1.3 பில்லியன் தொன் உணவு வருடா வருடம் விரயமாக்கப்படுகிறது.

What's new in the World of Food Waste: New Online Help for Scotland's Move Towards Zero Waste

FOOD WASTE MESSAGES

நிகழ்வுகள்

- பசுமைத் திட்டங்கள்
- மர நடுகை
- மீள் பயன்பாட்டு

twitter

1 வது சுற்றுச் சூழல் தினம் 1973ம் ஆண்டு கொண்டாடப்பட்டது.

2013ம் ஆண்டிற்கான சுற்றுச் சூழல் தின நிகழ்வுகளை நடத்துவதற்கு UNEP இனால் மொங்கோலியா தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

save FOOD | NRDC | STOP WASTING FOOD | CINEMAMBIENTE | UNEP | FAO | Messe Düsseldorf

© 2013 THINK.EAT.SAVE

இவ்வருடத்தின் உலக சூழல் தினத்தின் கருப்பொருள் 'உணவு விரயமும் உணவு இழப்பும் அற்ற வகையில் நீ சிந்தி; உண்; சேமி' என்பதாகும்.

THINK, EAT, SAVE
REDUCE YOUR FOODPRINT

facebook இல் Like செய்யுங்கள்...
www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013ஆம் ஆண்டிற்கான புதிய வெளியீடுகள்

எதிர்பாருங்கள்! இஸ்லாமிக் புக் ஹவுஸின் (G.C.E. O/L) மாணவர்களுக்கான கடந்த கால வினாப்பத்திரம் (Passpaper) (விடைகளுடன்)

Rs: 280.00



Rs: 260.00



Rs: 280.00

Rs: 300.00



Rs: 200.00

Rs: 280.00



Rs: 280.00



Rs: 250.00



Rs: 300.00

Rs: 980.00



Rs: 260.00

புள்ளியிடல் திட்டத்திற்கு அமைய சுய கற்றல் வழிகாட்டி நூல்கள்

77, Dematagoda Road, Colombo 09.

Tel: 0112684851, Fax: 0112688102 Web: www.ibh.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org